விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 10 வெள்ளிக்கிழமை (24.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# தமிழர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## அமைச்சர்கள் மூவர் கூட்டாக தெரிவிப்பு

**வடக்கு மாகாண சபைத் தேர்தல் உரியமுறையில் நடத்தப்பட்டு தமிழர்களின் அபிலாசைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

"ஜனநாயகம்மற்றும்தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காக புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் குடியரசு தினத்தைக் கொண்டாடியது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்தி முன்னோக்கி இட்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியை கவிழ்ப்பதே இலக்கு

### -ஐ.தே.க

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றுவதே. அதேபோன்று ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வது அரசாங்கத்தின் வேலை என ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் (19ஆம் பக்கம் பார்க்க)




அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்தை இரத்துச் செய்யுமாறுகோரி அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பியினரால் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது...

## கார்ப் பந்தய அனுமதி; மக்களுக்கா? மகன்களுக்கா?

### ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி சாடல்

கார்ப் பந்தயங்களுக்கான அனுமதியை மகிந்த அரசு வழங்கியது மக்களை சந்தோசப்படுத்த அல்ல. தனது மகன்மாரை சந்தோசப்படுத்தவே என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி.யினால் மின் கட்டண உயர்வை இரத்துச் செய்யுமாறு அரசை வலியுறுத்தி நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மகிந்த அரசாங்கத்திற்கு எதிராக நாம் அனைவரும் இன்று வீதி ஆர்ப்பாட்டத்திற்கு துணிந்து இறங்கியுள்ளோம்.

நிவாரணம் தருவதாக மக்களுக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## 4ம் மாடி விசாரணை நாளை எனக்கா?

### சபையில் சம்பந்தன் காட்டமாக கேள்வி

"சிவசக்தி ஆனந்தனை நேற்று விசாரணை செய்தீர்கள். நாளைக்கு என்னையும் நான்காம் மாடியில் வைத்து விசாரணை செய்வீர்களா? ஏன் நீங்கள் இப்படி தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றீர்கள்? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று வியாழக்கிழமை அமைச்சர்கள் முன்னிலையில் கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கடந்த செவ்வாய்க்கிழமை நான்காம் மாடியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

வவுனியா (19ஆம் பக்கம் பார்க்க)

## மத்தலவில் மகிந்த குளத்தை கட்டியிருக்கலாம்!

### பொது பல சேனா சு(கு)ட்டிக்காட்டு

மத்தளவில் சர்வதேச விமான நிலையத்தை கட்டியதற்கு பதிலாக அங்கு குளம் ஒன்று கட்டியிருந்தால் மகா பராக்கிரமபாகு போன்று ராஜபக்ஷ பெயரும் வரலாற்றில் பதிவாகியிருக்கும் என்று பொது பல சேனா தெரிவித்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதியை சூழவுள்ள ஆலோசகர்கள் இவ்வகையான பயனற்ற திட்டங்களை ஜனாதிபதிக்குக்கூறி மக்களின் நிதிக்கு ஆப்பு வைக்கக் கூடாது என்றும் அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பொது பல சேனாவின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய அவ்வமைப்பின்பொதுச செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகையில்,

ஜனாதிபதியை சூழவுள்ள ஆலோசகர்கள் புதுமையானவர்கள். விசித்திரமான ஆலோசனைகளை வழங்கி (19ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆஸி பயணம்

## 31 புகலிட கோரிக்கையாளர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்!

சட்டவிரோ்தமாக படகுகளில் அவுஸ்திரேலியாவிற்கு சென்றிருந்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 31 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை விவகார அமைச்சர் பிரெண்டன் ஓகோணர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய, இதுவரை 1161 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிப்பதற்காக ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு பணம் வழங்குவதன் மூலம் பணத்திற்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படுவதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போதல் தொடர்பில் மன்னிப்புச் சபை அறிக்கை

(லண்டன்)

இலங்கையில் கடந்த ஆண்டில் 20 காணாமல்போதல் சம்பவங்கள இடம்பெற்றுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குற்றவாளிகள், வர்த்தகர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இவ்வாறு காணாமல் போயுள்ளனர். அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிடும் தரப்பினர் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சட்டவிரோத கைதுகள், கடத்தல்கள், சித்திரவதைகள் போன்ற சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி மாற்றுக் கொள்கையாளர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் மேலும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விசேட தேவையுடையோருக்கான தொழில் வசதி வழங்கும் திட்டம்

## சமூக சேவைகள் அமைச்சு முன்னெடுக்கிறது

(கொழும்பு)


சமூக சேவைகள் அமைச்சினால் விசேட தேவையுடையோருக்கு தொழில் வசதி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை சமூக சேவை அமைச்சின் உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தொழில் வாய்ப்பினை எதிர் பார்த்துள்ள தொழில் தகைமை மற்றும் கல்வித் தகைமை உடைய விசேட தேவையுடையோர் குறித்த வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் வட மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்களிடம் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் யூன் மாதம் 21-ம் திகதிக்கு முன் னர் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவித்தல் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.பி. எல்.பெர்னாண்டோவினால் வட மாகாண அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)



கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் தோட்டத்தில் வளர்க்கப்பட்ட காய்கறிகளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பறித்து தோட்டப் பராமரிப்பாளரிடம் கொடுப்பதை படத்தில் காணலாம்.

# வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் இடமாற்றத்தை ரத்துச் செய்ய வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கண்டி வைத்தியசாலைக்கு இடமாற்றலாகிச் சென்ற யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயக்குமார் மீண்டும் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமார், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்திலுள்ள புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்துவதிலும் அயராது உழைத்தவர்.

அவரின் அரவணைப்பாலும் அவரின் சேவையாலும் மனநிறைவும் நம்பிக்கையும் கொண்டிருந்த புற்றுநோயாளர்கள் டாக்டர் ஜெயக்குமாரின் இடமாற்றத்தால் அதிர்ந்து போயுள்ளனர்.

எனவே டாக்டர் ஜெயக்குமார் தனது இடமாற்றத்தை ரத்துச் செய்து மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற வேண்டும் என பொது மக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந)

# 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்போருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம்

## பருத்தித்துறை பிரதேச சபையில் நிறைவேற்றம்

(கரவெட்டி)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசியல் யாப்பிலுள்ள 13-வது அரசியல் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் அதற்கு எதிராக கோஷம் எழுப்பி வரும் தென்னிலங்கை இனவாத அமைப்பினருக்கு எதிராக தமது கண்டனங்களை வெளியிட்டு பருத்தித்துறை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச சபை உறுப்பினர் மா.லோகசிங்கம் 13-வது அரசியல் திருத்தச் சட்டம் தொடர்பாக உரையாற்றும் போதே இத்தீர்மானத்தை சபையில் கொண்டு வந்தார்.

இந்நாட்டின் ஜனாதிபதி 13-வது அரசியல் திருத்தச்சட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் எனவும் அதற்கு எதிராக செயற்பட்டு வரும் தென்னிலங்கை இனவாத அமைப்பினரை கண்டிக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார்.

அதற்கு சபை உறுப்பினர்கள் ஆதரவாகக் கருத்துத் தெரிவித்ததையடுத்து இத் தீர்மானம் பருத்தித்துறை பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது. (அ-3, 24)

# மாற்று திறனாளிகளுக்கு உதவ அதிகாரிகள் முன்வர வேண்டும்

## இமெல்டா சுகுமார் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்களின் தேவைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுக்க இங்குள்ள அரச அதிகாரிகள் முன்வருவதில்லை என குற்றம்சாட்டிய முன்னாள் யாழ். அரச அதிபரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளருமான திருமதி இமெல்டா சுகுமார், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுக்க பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சினால் யாழ். மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக காசோலைக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவுகளையும் வழங்கியிருந்தார்.

இதன்போது கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள 13 பேருக்கும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2 பேருக்கும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அத்துடன் நெடுந்தீவு பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் யுனிசெப் நிறுவனத்திற்கான இணைப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள், பட்டதாரி பயிலுநர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (செ-6)

# பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.திருமாலழகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் டி.எம். வேதாரணியம் கலந்து கொள்கிறார். இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் இரா.இராஜேஸ்கண்ணாவின் சிறப்பு சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (செ)

# எழுத்தாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் எழுத்தாக்கப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது என பாடசாலை அதிபர் திருமதி சண்முகரத்தினம் அறிவித்துள்ளார். (செ-5)

# வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர் நோக்கியுள்ள வர்த்தகப்பிரிவு மாணவர்களிற்காக யாழ்.மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக மாணவர்களினால் நடத்தப்படும் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 9 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# நம்மாழ்வார் ஜெயந்தியும் சுதர்ஸன ஹோமமும்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு "ஸ்ரீ நம்மாழ்வார் ஜெயந்தி உற்சவமும் ஸ்ரீசுதர்ஸன ஹோமமும்" இடம்பெறவுள்ளது என்பதை பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அறிவித்துள்ளது. (செ)





**28.0.5.2013 இல் வியாழ மாற்றம்**

சோதிட ஞானி சண் மாஸ்ரர் ஆ.சண்முகலிங்கம் எழுதிய இராசி பலன்கள் நூல் வெளி வந்து விட்டது ரூபா 50/= தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அதிகம் கழிவு தரப்படும்.

T.P:- 077 2845000

சி.சி.ரி.எம்.ஸ்கூல் லேன்
கொக்குவில் மேற்கு (2833)

**வேலையாள் தேவை**

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும் ➢ சிட்டை எழுதுநர் ( பெண்) வயது (18-30)

➢ சிட்டை எழுதுநர் ( ஆண்) வயது ( 45-60)

தொடர்பு: 0777488093 (2834)

**பதவி வெற்றிடம்**

○ஓப்செற் இயந்திர இயக்குநர்கள் (முன் அனுபவம் உள்ளவர்கள்)

○ஓப்செற் இயந்திரப் பயிலுநர்கள் (ஆண்கள்)

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் 25.05.2013 நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

குறிப்பு: எட்டிய தூரங்களில்இருப்பவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதி வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
வலம்புரி: இல. 3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்ல நீதிபதி

ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம் மாஸ். அவர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடம் இருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை.

"எனக்கு ஊதியம் வேண்டாம் என்று அவர் கூறி விட்டார். அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?"

இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார். வீட்டு வேலைகள் அனைத்தையும் வீட்டில் இருப்பவர்களே கவனித்துக் கொண்டார்கள்.

அவர் மக்கள் எந்நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார்; மக்களுக்கு அவர் மீது அதிக மரியாதை இருந் தது.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் பண முடிச் சொன்றை வழங்க முன்வந்தார். ஆனால், அதை வாங்க அவர் மறுத்துவிட்டார்.

"நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள். அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே, அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்கள்" என்று முதல்வர் கூறினார்.

ஆனால், அதற்கு நீதிபதி மசியாமல் "நான் மக்களுக்குப் பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை" என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

"சரி... இதற்கும் மேலே இவரை வற்புறுத்தினால், இப்பதவியிலிருந்து விலகினாலும் விலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்து விடக்கூடாது" என்று நினைத்து முதல்வர் பேசாமல் இருந்து விட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவை களை புல்வெளியில் மேயவிட்டு, அமர்ந்திருப்பதற்கு தனது நண்பன் ஒருவனுடைய வீட்டை அண்டி ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று இவர் ஏற்பாடு செய்தார்.

ஆனால், அதற்கு நண்பன் ஒப்புக் கொள்ளவில்லை. "இது நடைபாதை... இதில் குடிசை கட்ட முடியாது" என்று அவன் தடுத்தான்.

அதனால் இருவருக்கும் இடையில் தகராறு மூண்டது. "சரி... இதற்கும் மேலேயும் நமக்குள் வம்பு வேண்டாம்; பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்" என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இருவரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி நடந்த வேளையில் எதிரில் ஒருவர் தண்ணீர் குடத்துடன் வந்து கொண்டிருந்தார்.

அவரிம் இவர்கள் இருவரும் "இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்" என்று வின வினார்கள்.

"நான்தான் நீதிபதி... உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்" என்றார்.

"எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால், நீங்களே தண்ணீர் குடமும் கையுமாக இருக்கிறீர்கள். அதை சற்று கீழே இறக்கி வையுங்கள். அதன் பின் நிதானமாக நாங்கள் சொல் வதைக் கேளுங்கள்" என்று இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி; "இது மக்கள் நடந்து போகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து... இந்த வழியாகப் போகும் பொது மக்களுக்கு இடை ஞ்சல் கொடுக்க விரும்பவில்லை. ஆதலால் இக்குடம் என்னி டமே இருக்கட்டும். நீங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்" என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும், "சரி ஐயா... நாங்கள் போய் வருகிறோம்" என்று கூறிய படியே புறப்பட்டார்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இந்திய மீனவர்கள் 26 பேரும் தாயகம் திரும்பியுள்ளனர்

## உதவி துணைத்தூதுவர் தெரிவிப்பு

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 26பேரும் நேற்று தமது படகுகளின் மூலம்நாடு திரும்பியுள்ளனர் என யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவித்து ணைத்தூதுவர் எஸ்.தட்ஷணாமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தியாவின்தமிழ் நாடு காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 26 பேரையும் அவர்களது ஐந்து படகுகளுடன் கடந்த 21 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி விடுவித் தார்.

காரைக்கலைச் சேர்ந்த 26 மீனவர்கள் இலங்கைக்கு கடல் எல்லையைத் தாண்டி வந்தபோது கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி இரவு நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இந்த மீனவர்களுக்கு எதிராக 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதோடு இவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு கடந்த 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். சபேசன் முன்னிலையில் 21ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுது நீதிபதி எஸ்.சபேசனின் உத்தரவின் பேரில் 26 இந்திய மீனவர்களும் விடுக்கப்பட்டுபடகு மற்றும் உடைமைகளும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட இந்த இந்திய மீனவர்களை யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதனையடுத்து இலங்கை-இந்தியத் தூதரகங்களின் ஏற்பாட்டில் இவர்களை நேற்று முன்தினம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் கடல் கொந்தளிப்புக் காரணமாக அந்தப் பயணம் இரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று தமது படகுகளின் மூலம் இந்தியா அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இந்திய மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். இந்தியத் துணைத் தூதரகஉதவித்துணைத் தூதுவர் தெரிவித்தார். (அ-6)

# கிளி. மாவட்ட அதிபர்சங்கம் சட்டபூர்வமாக பதியப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வலய பாடசாலைகளுக்கு அதிபர் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் அதிபர் சம்பந்தமான விடயங்களைக் கையாளும் போது, கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத்தின் தலைவர் /செயலாளர் இருவரில் ஒரு உறுப்பினர் பங்கு கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்க செயலாளர் தி. வரதன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளாரைக் கோரியுள்ளார். அவர் அவருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிபர்கள் கடந்த 2012. 07.01 முதல் உத்தியோகபூர்வமாக அதிபர் சங்கம் ஒன்றை உருவாக்கி செயற்படுத்தி வந்தனர். இச்சங்கம் கொழும்பு நாரேன்பிட்டியவிலுள்ள தொழில் திணைக்களத்தில் தொழிற் சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சட்டபூர்வமாக தொழிற்படும் அனுமதியை கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து பெற்றுள்ளது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வலய அதிபர் நியமனங்கள், இடமாற்றம் மற்றும் அதிபர் சம்பந்தமான விடங்களை கையாளும் போது அலுவலகத்தின் செயலாளர்/ தலைவர் இருவரில் ஒரு உறுப்பினரைப் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பமளிக்க ஆவன செய்யுமாறு பணிவாக கேட்டுக் கொள்வதோடு இவ்விடயத்தை வலயக்கல்வி அலுவலக அதிபர் இடமாற்றச் சபையில் பங்குபற்றவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 120 | 120 |
| தக்காளி | 120 | 110 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 120 | 100 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 170 | 120-180 | 120-160 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 120 | 70 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 110 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 120 | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 35 | 30 |
| தேசிக்காய் | 140 | 50 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-45 | 30-35 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

# இராசி பலன்

24.05.2013
(வைகாசி 10, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 12.39 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.01 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
வைகாசி விசாகம், பூரணை விரதம்
வெசாக் முழுநோன்மதி தினம்

**மேடம்** வாழ்க்கைத் துணைவழியே மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரும், பொருள் வரவிற்கு அத்திபாரமிடுவீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர் கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், மாமன்-மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், உள்ளன்போடு பழகியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வருவர், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனையில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வருவர், தொழில் சம்பந்தமாக முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உங்களின் யோசனைக்கு பாராட்டுகள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மாதர் நட்புண்டு, முன்னேற்றம் கருதி அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**துலாம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், தொழிலில் புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, கொள்கைப் பிடிப்பை உறவினர் நலன் கருதி தளர்த்தும் எண்ணம் உருவாகும், சயன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பாகப் பிரிவினைக்கு ஒத்துழைப்பு வழங்குவர், சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வருகையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மகரம்** நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், செலவுக்கேற்ப பணம் வந்து சேரும், ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக விருப்பம் காட்டுவீர்கள், அமைதி வேண்டி ஆலயத்திற்கு நகர்வீர்கள்

**கும்பம்** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், தொழில் முன்னேற்றம் கருதி சில பயணங்கள் இடம்பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், விருந்தினரை வரவேற்று வியப்படையும்நாள்.

**மீனம்** அலைச்சல்கள் அதிகரிக்கும், எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வேலைச்சுமை கூடும், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கம்பன் கழகத்தின் கம்பன்விழா 2 ஆம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கம்பன் கழகத்தினரால் கம்பன் விழா நேற்று வியாழன் முதல் ஆரம்பமாகியுள்ளது. இதன் இரண்டாம் நாள் நிகழ்வுகளில் இன்று காலை 9 மணிக்கு முதலாம் அமர்வும், மாலை 4.30 மணிக்கு இரண்டாம் அமர்வும் இடம்பெறவுள்ளன.

முதல் அமர்வு நாவலர் கலாசார மண்டபத்தில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் மங்கல விளக்கை எஸ்.மகாலிங்கம் தம்பதியர் ஏற்றவுள்ளதோடு, கடவுள் வாழ்த்தை யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் செல்வி. க.பரமேஸ்வரியும், தொடக்கவுரையை யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜாவும் ஆற்றவுள்ளனர்.

இவற்றைத் தொடர்ந்து, ''சுழலும் சொற்போர் '' நிகழ்வு பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும். ''இந் நிகழ்வில் சோதனையைச் சாதனையாக்கியோருள் பெரிதும் முன் நிற்பவர் ''எனும் தொனிப் பொருளில், இரா்மனே! என அ.சர்வேஸ்வராவும், பரதனே! என இ.செந்தூர்ச் செல்வனும், விபீடணனே! என செ.சொபிசனும், சூர்ப்பனகையே! என கு.பாலசண்முகனும், கும்பகர்ணனே! என அ.வாசுதேவாவும், சீதையே! என ச.லலீசனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பின்னர் உரை அரங்கு நிகழ்வு இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் தலைமையில் "பெண்ணிற் பெருந்தக்க "எனும் தொனிப் பொருளில் ''பிரிவினும் சுடுமோ? ''என்று த.நாகேஸ்வரன், "நெஞ்சினால் பிழைப்பிலாள் "என்று ச.மார்க்கண்டு,''பகல் வந்த படிவம்''என்று ரி.ரெங்கராஜா,"தடவியதோ ஒருவன் வாளி" என்று புலவர் இரா.மாது ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இரண்டாம் அமர்வு, மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் ஆரம்பமாக வுள்ளது.

இந் நிகழ்வில் மங்கல இசையை பி.எஸ். பாலமுருகன் குழுவினர் வழங்கவுள்ளதுடன், மங்கல விளக்கை ந.சத்தியரூபன் தம்பதியர் ஏற்றவுள்ளனர்.

கடவுள் வாழ்த்தை யாழ்.பல்கலை. இசைத் துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ.தர்ஷனனும் தொடக்கவுரையை யாழ்.போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவும் வழங்கவுள்ளனர்.


அடுத்து, பட்டிமன்ற நிகழ்வு கம்பவாரிதி இ.ஜெயராஜை நடுவராகக் கொண்டு "இராமனின் பெருந்தன்மை பெரிதும் வெளிப்படுவது" எனும் தொனிப் பொருளில், "கைகேயி முன்பே! ''என இரா.செல்வவடிவேல், த.சிவகுமாரனும், வாலியின் முன்பே! என புலவர் இரா.மாது, பேராசிரியர் தி.வேல்நம்பியும், ''இராவணன் முன்பே! ''என த.இராமலிங்கம், ந.விஜயசுந்தரம் ஆகியோரும் வாதிடவுள்ளனர். (அ)

## ஆன்மீக சொற்பொழிவு

(தும்பளை)

இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தின் அலங்கராகத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இத் திருவிழாவில் தினமும் மாலை 6 மணியளவில் சைவப் புலவர் பண்டிதர் பொன். சுகந்தனின் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது என ஆலய பரி பாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3-19)



நன்றி: ஐலண்ட்

# இரும்பு திருடிய ஐவர் கைது

(மிருசுவில்)

கோண்டாவில் டிப்போவில் இரும்பு களவாடிய 5 நபர்களை கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது, கோண்டாவில் டிப்போவிற்குப் பின்புறமாக குவித்து வைக்கப்பட்டிருந்த இரும்புகள் பல வருடங்களாக திருடப்பட்டு வந்துள்ளன.

இவ் விடயம் தொடர்பாக கோண்டாவில் டிப்போ ஊழியர்களால் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே 5 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 5 நபர்கள் மீதும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-3-85)

# மேதினவிழாவும் மாணவர் பாராட்டும்

உரும்பிராய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் மேதின விழாவும் பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இச் சனசமூக நிலைய முன்றிலில் விழாக்குழுத் தலைவர் திருமதி எட்வின் ராஜ்குமார் சோபியாழினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும் சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், உரும்பிராய் பிரதேசசபை உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி ஞானகி கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி அ.யூட்ரிக்ஷன், கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம், ஊரெழு கிராம அலுவலர் கோ. ஜெயந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-134)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு முதலாமிடம்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பிரதேச மட்டத்திலான திவிநெகும புத்தாண்டு விற்பனைச் சந்தையில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இச் சந்தையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள், அவற்றின் விலைகள், மக்களின் கொள்வனவு, கவரக்கூடிய விளம்பரங்கள் என்பவற்றோடு மதிப்பீட்டுக் குழுவினரால் அவதானிக்கப்பட்ட வேறு விடயங்களையும் கருத்திற் கொண்டே புள்ளிகள் வழங்கப்பட்டன.

இவற்றில் முதல் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு, முதலாம் இடத்தை கோப்பாய் பிரதேச செயலக பிரிவு பெற்றுள்ளது. (அ-3-134)

# மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சில்லு வண்டிகள்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து மாற்றுத்திறனுடைய சிறுவர்களுக் கான மூன்று சக்கரவண்டிகள் கரவெட்டி பிரதேச சபையால் அவர்களது பெற்றோர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.



இந்நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை கரணவாய் மூத்த விநாயனார் கல்யாண மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் வண்டிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு,

இ.லலிதா (அல்வாய் தெற்கு), நி.மிறெஷ் (வல்வெட்டி), க.சூரியதாசன் (கரவெட்டி மேற்கு), த.வளர்மதி (மண்டான் கரணவாய் மேற்கு), ம.கமலாதேவி (கரவெட்டி மேற்கு) ஆகியோர். இவர்களுக்கான முச்சக்கரவண்டிகளை கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ வழங்கியுள்ளார். (அ-3-60)






உலக மலேரியா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலிருந்து ஆரம்பித்து துரையப்பா ஞாபகார்த்த விளையாட்டரங்கில் முடிபடைந்தது. இந்த நடைபவனியில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியா தடை இயக்க அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமாரன், சர்வோதய நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பலர் பங்கு கொண்டதோடு மலேரியா விழிப்புணர்வு பதாகைகளையும் ஏந்தியவாறு நடைபவனியில் பங்கு கொண்டனர். அத்தோடு மலேரியா விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகமும் கணக்கியலும் பாடநெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இவ் ஆண்டுக்கான புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்காக வணிகமும் கணக்கியலும் பாடநெறி நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பா ணம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடைபெறும் என பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

வி.கயனி (காரைநகர்), ஜெ.நிவேதா (கொற்றாவத்தை),எ.பிரியங்கா (துன்னாலைமத்தி), வி. கிருனாளினி (ஈச்சமோட்டை), எஸ்.மதிமலர் (காரைநகர்), எல்.பிறமிளா (மானிப்பாய்), ரி.தமிழினி (ஆனைக்கோட்டை), பி.லக்சிகா (கரவெட்டி மத்தி, ஜே.நிவேதா (துன்னாலை மத்தி, எல்.சுகந்தி (பருத்தித்துறை), எஸ்.மேருகா (மானிப்பாய்), எஸ்.வேணுஜா (இணுவில் கிழக்கு), ரி.கௌசிகன் (கச்சேரி), எல்.சிகாந்தினி (பருத்தித்துறை), யு.டுஷாளினி (உடுப்பிட்டி).

கே.துசாந்தன் (அல்வாய் கிழக்கு), பி.சுவர்ணா (வண்ணார் பண்ணை), வி.சதுர்ஷன் (கொக்குவில் கிழக்கு), எம்.முகுந்தன் ( துன்னாலை), ஆர்.றஜிந்தா (சண்டிலிப்பாய்), வி.தர்மிலா (புங்குடுதீவு),ரி. சுகிதரன் (முள்ளியவளை), எஸ். குணஷங்கரி (சுதுமலை தெற்கு), ஆர்.செந்தூர் (ஏழாலை தெற்கு),எஸ்.தர்ஷிகா (கரவெட்டி மேற்கு), எம்.அனுஷனா (நல்லூர்), ஆர்.சிவசங்கர் (தாளையடி), எஸ்.கேசவன் (கரணவாய் தெற்கு), ஆர்.ரஜினி (ஊர்காவற்றுறை).

கே. நிரேஷா (கிளிநொச்சி), ஏ.பார்த்தீபன் (கிளிநொச்சி), எஸ்.நிறோஜன் (மடு), என்.சிவரூபன் (புதுக்குடியிருப்பு),கே.கிறிஸ்ரி பிரியா( ஜெயந்திநகர்), பி.சூரியபாலன் (பாரதிபுரம்), எஸ்.சாமந்தி( இராமநாதபுரம்),கே.மரியா எட்வினா கொண்ஜே (சிலாவத்துறை), எஸ்.நிறோஜன் (இராமநாதபுரம்), சி. ஜோன்சன் பைவா (பேசாலை -05), எஸ். பாத்திமா சுமையா (அக்கரைப் பற்று), எவ்.இசற் பாத்திமா சுஷ்ரா அபூபைதா (புத்தளம்), எம்.பாத்திமா ஷகாரா (உடத்தலவுன்ன).

எம்.பாத்திமா நஸ்றிவா (வெலிகம), எம்.பாத்திமா ஹஸ்னா (டர்கா நகர்), ஏ.பாத்திமா ஷவ்ரினா (பானந்துறை), எம்.பாத்திமா றுஷ்டா (டர்காநகர்), எம். மின்ஹஜ் மொகமட் (றதுஹெறாகோங்கலர), எம்.பாத்திமா நிப்லா (ஹாலி-எல), எம்.பாத்திமா (அஹ்குறண), கே.அனுஷா (மட்டக்களப்பு), எம்.பாத்திமா அம்றீன் (ஹம் பொல), ஏ.பாத்திமா பஷீகா (பலாங்கொட), எம்.பஷ்மினா (பதுலுப்பிட்டிய), எம்.நஷீர் முஹமட் (ஹெலிஓயா), எம்.பாத்திமா தஹீறா (ஹெலிஓயா), எ.மொஹமது இஷான் (ஆனமடுவ), எம்.சித்திஷலீஹா (டர்கா நகர்).

எஸ்.பாத்திமா பஷ்னா (கல்முனைக்குடி - 3), எம்.பாத்திமா பர்மிலா (மாவன்-எல), எம்.பாத்திமா ஹஷ்னா (ஹெலிஓயா), பி.மொஹமட் நஷீக் (மருதமுனை), எம்.எ.மொஹமது அஷ்வாக் (முதலிப்பிட்டிய), எச்.மொஹமட் சடாத் (புத்தளம்), எம்.ஷிவானா ஷீனி (கல்முனை-3 ), எம்.பாத்திமா ஷகீலா (பலாங்கொட), ரி.ரூபன் (டிக்கோயா), எஸ்.சகானா (கல்முனைக்குடி- 8), எ.பாத்திமா பஸ்மியா (நிந்தவூர் -9), எ.பாத்திமா பஸ்மினா(அக்கரைப்பற்று -1), எம்.பாத்திமா ஷவ்றீனா (அம்பாறை), ரி.குகனேஸ் (மிறுஹாவத்த).

எம்.எப்.அஷ்மா (பதுளை), பி.அனுஷா (அக்கரைப்பற்று -9), எ.பாத்திமா அவ்றாக் (சாய்ந்தமருது -10), எம்.எஸ்.சம்ரன் அஹமட் (மாத்தறை), யு.சஸ்னா (ஓட்டமாவடி), என்.மொஹமட் ஷியாத் (கிண்ணியா), கே.லக்ஷ்மன் (கொட்டகல), எம்.பாத்திமா இஷாதா (நிந்தவூர் -15), எம்.என். ஷபீகா (அக்கரைப்பற்று), எம்.பாத்திமா நும்லா (நிந்தவூர்-14), எம்.பாத்திமா முர்ஷிடா (மாத்தளை), ரி.உதயகுமார் (டிக்கோயா), பி.சுரேந்திரன் (லிண்துல), ரி.மயூரி (மட்டக்களப்பு).

எஸ்.வீ.சன்ஜீதா ( அக்கரைப்பற்று -1), எம்.மொஹமட் அர்ஷாத் (திருகோணமலை), அமீன் ஹவ்ஷா (மூதூர் -4), றோசியா சதுலி (ஓட்டமாவடி), என். நித்தியகலா (கொட்டகல), எஸ். அர்ஷாத் (திருகோணமலை), ரி.பவிராஜ் (தன்னமுனை), எம்.மொஹமட் முவாஸ் (பொத்துவில் -14), எம்.சுவோதினி (வாரிக்குடியூர்) எஸ். மிவ்றாஸ் (வவுனியா), பி.ரேவதி (கொட்டகல), ஜே.சகானா அன்ரனீறா (மட்டக்களப்பு), வை.நவரூபன் (வவுனியா)

(தொடரும்)

# கிழக்கு மாகாணத்தில் ஒற்றுமையுடன் மூவின மக்களும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு அடையாளமாகவே இந்திய வீடமைப்புத் திட்டம் விளங்குகிறது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது நாட்டில் தலை விரித்தாடிய பயங்கரவாதப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமரைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இவ்வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்திய வீட்டுத்திட்டத்தை வட மாகா ணத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டி ருந்தது.

இவ்வீடுகளை அமைப்பதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் ஐந்து இலட்ச்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை நான்கு கட்டங்களில் வழங்கவுள்ளோம். இவ்வீடுகளைப் பயனாளி களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் . இவ் வேலைத்திட்டம் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் கூறினார் . (அ-2)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

காலம் : 17.06.2013 திங்கட்கிழமை காலை 10.00 மணி
இடம் : உடுவில் உப அலுவலகம், மருதனார்மடம்

**பொருட்கள் :**
Photo copy Machine, Monitor, Printer, CPU, Key Board, Mouse, Speaker Multi Media, UPS Power tree, Filter Glass, Fan, Type Writer, Fax Machine, Wash Basin, கதிரைகள், வாகன பற்றரிகள், ரயர்கள், றிம்கள், ரியூப்கள், மற்றும் ஓடுகள், முகட்டு சீற், தகர கேற், கம்பி வலைகள், கம்பிக்கேற், பலகைக் கதவுகள், பிக்கப் வாகன உடல் (Body).

**நிபந்தனைகள்**
1. ஏலதாரராகக் கலந்துகொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.
2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
3. 10.06.2013 தொடக்கம் 14.06.2013 வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 முதல் மாலை 4.15) உடுவில் உப அலுவலகத்தில் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் தொலைபேசி இலக்கம் - 0212240017 இல் தொடர்புகொள்ளலாம்.
4. மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**தி.பிரகாஷ்,**
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (சி/3407)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: T.P. 021 321 0815, 021 567 1540

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-3199)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>உயரம்: 5' 9"<br>கி.பா: 30, 2 இல் சூரி,செவ்<br>தகைமை/தொழில்: IT Support SpecialistCanada<br>தொ.இ:B1839 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5'<br>கி.பா :35.25 7 இல் செவ்<br>தகைமை/தொழில்:A/L ,Accounts clerk<br>தொ.இ:G1821 |
| பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>உயரம்: 5' 5"கி.பா:11.75, 4 இல் செவ்தகைமை/தொழில்:A/L, France PR<br>தொ.இ:B1842 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>உயரம் : 5' 3"<br>கி.பா: 62 8இல் சூரி,செவ்<br>தகைமை/தொழில்: A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>சைவபோசனம்<br>தொ.இ:G1845 |
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>பாஉயரம்: 5' 10"<br>கி.பா:41<br>தகைமை/தொழில்: ,BSC, ஆசிரியர்சைவபோசனம்<br>தொ.இ:B1843 | பிறப்பு: 1971 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 63<br>தகைமை/தொழில்: A/L, BAஆசிரியர்<br>தொ.இ:G1847 |
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5' 7"<br>கி.பா: 27.5 12 செவ்<br>இல்தகைமை/தொழில்: A/L UK, PR<br>தொ.இ:B1846 | பிறப்பு: 1978 இந்து (K)<br>நட்சத்திரம்: ரோகிணி 4 உயரம்: 5'கி.பா : 55.5 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L<br>விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்<br>தொ.இ:G1849 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

(கடந்த வாரத் தொடர்ச்சி..)

**4.தொடருறு கல்வியை முகாமை செய்தல்**

தொடருறு ஆசிரியர் கல்வி என்பது ஒரு செயன்முறையாகும். தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தலுக்குப் பொருத்தமான கல்வி மற்றும் "பயிற்சி"யைப் பெற்றுக் கொள்ள இச் செயன்முறை உதவுகின்றது. கல்வி என்பது கற்பித்தலின் அறிவு அல்லது எண்ணக்கரு சார்ந்த அம்சங்களைக் குறிக்கிறது. அதேநேரம் பயிற்சி என்பது கற்பித்தல் தொடர்பான திறன்களை நடைமுறை மற்றும் பிரதிபலிப்பு மூலம் விருத்தி செய்வதைக் குறிக்கிறது. ஆசிரியர் கல்வி மூலமே ஆசிரியர்கள் தொழில்சார் வாண்மைத்துவத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆசிரியரின் தொழில்சார் வாண்மையானது தேர்ச்சி, செயலாற்றுகை மற்றும் நடத்தை ஆகிய பண்புக்கூறுகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வகுப்பில் ஏற்படக்கூடிய பல்வேறுவிதமான பிரச்சினைகள் மற்றும் எதிர்வு கூற முடியாத சூழ்நிலைகளை கற்பனை மிகுந்த தனியாள்மைய நுட்பங்களைக் கையாண்டு ஓர் ஆசிரியர் முகங்கொடுக்கக்கூடிய தயார் நிலையே தேர்ச்சி எனப்படும். கலைத்திட்டத்திலுள்ள எண்ணக்கருக்களை கற்பிக்கக் கூடிய ஆசிரியரின் ஆற்றல் செயலாற்றுகை எனப்படும்.

ஒருவர் தனது தோற்றம், மொழி, நடத்தை மற்றும் தொழில்சார் நடத்தை முதலியவை தொடர்பாக எடுத்துக்கொள்ளும் கவனமும், கல்வியில் ஈடுபாடுள்ள சகலரிடமும் அர்த்தமுள்ள தொடர்பாடலைப் பேணலும் நடத்தை எனும் பண்புக்கூறாகக் கருதப்படும். மேற்படி மூன்று வாண்மைத்துவம் தொடர்பான பண்புக்கூறுகளையும் ஒரு ஆசிரியர் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவர் ஓர் தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயிற்றப்படல் வேண்டும்.

தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வழங்கப்படும் ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சியானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருப்பின் மிகச் சிறந்த ஓர் மாற்றத்தை ஆசிரியரில் ஏற்படுத்தலாம். அவ் விடயங்களாவன,

- உள்ளடக்கப்பட்ட அறிவும் திறனும் ஆசிரியர்களிடம் இனங்காணப்பட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
- ஆசிரியர்களுக்கு கற்பிக்கப்படும் அறிவும் திறன்களும் ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்தவற்றுடனும் அவர்களால் செய்யக் கூடியவற்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல்.
- பல வகையான செயற்பாடுகளும் அனுபவங்களும் ஆசிரியரின் கல்வி நிகழ்ச்சிகளில் வழங்கப்படல். உதாரணமாக விடய ஆய்வுகள், செய்து காட்டுதல்கள், வகுப்பறைகளில் ஆசிரியர்களின் செயற்பாடு தொடர்பான ஒளிநாடாப் பதிவுகள், கலந்துரையாடல் குழுக்கள், ஒத்த குழுக் கற்பித்தல் என்பன வழங்கப்பட வேண்டும். (A valos and Haddad 1981 : Nitsaisook 1987)

தகவல் தொழில்நுட்பவியல் புரட்சி, பூகோளமயமாக்கம் போன்றவை காரணமாகத் தோன்றியுள்ள புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இன்றைய தொடருறு ஆசிரியர் கல்வி கொண்டிருக்க வேண்டும்.

புதிய அறைகூவல்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு சமூகத்தை உருமாற்றம் செய்யக்கூடிய 'மாற்று முகவர்' எனும் புதிய வகிபாகத்தையும் ஆசிரியர் இன்று ஏற்க வேண்டியுள்ளது. எதிர்காலப் பிள்ளைகளுக்கு கல்வி ஊட்ட முனையும் ஆசிரியர் கட்டுருவாக்க அணுகுமுறையை தனது கற்பித்தலில் தழுவிக்கொள்ள வேண்டும். இன்றைய ஆசிரியர் பரிமாற்றம் (Transaction), கடத்துகை (Transmission) ஆகிய வகிபங்குகளை விடுத்து உருமாற்றம் எனும் புதிய வகிபங்கை ஏற்கவேண்டியுள்ளார். இதற்கு ஆசிரியர் கல்வியை, தொடர்ச்சி நிலையில் ஒன்றிணைக்கப்பட்ட முறைமையான கல்வியாகத் தொடர வேண்டும். இவ் ஒன்றிணைப்பில் இரு கூறுகள் உள்ளன:

(அ) ஆசிரியர்களின் தொடக்கநிலை வாண்மைத்துவக் கல்வி

(ஆ) ஆசிரியர்களின் தொடருறு வாண்மைத்துவக் கல்வி

ஆசிரியர்களின் தொடக்கநிலை வாண்மைத்துவக் கல்வி என்பது தமது தொழில்சார் வாழ்க்கையில் ஆசிரியர்கள் முதன்முதலில் பெற்றுக்கொள்கின்ற வாண்மைத்துவக் கல்வியைக் குறிக்கும். உண்மையில் இது சேவை முன் கல்வியாக (Pre Service) இருக்க வேண்டும். தொடருறு ஆசிரியர் கல்வி என்பது ஆசிரியர்களின் சேவைக் காலத்தில் கிரமமாக வழங்கப்படுகின்ற வாண்மைத்துவக் கல்வியைக் குறிக்கும். பாடங்கள், கற்பித்தல் முறைகள், தேசிய கல்விச் சீர்திருத்தங்கள், ICT மற்றும் தொடர்புள்ள பல்வேறு துறைகளில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விடயங்கள் உடனுக்குடன் ஆசிரியர்களைச் சென்றடையச் செய்ய தொடருறு கல்வி அவசியமாகின்றது.

**4.1 தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைக்கத் தேவையான தகவல்கள்.**

ஆசிரியர் கல்வி ஒரு தொடர்பகமாகவே நோக்கப்படுகின்றது. இதில் தொடக்க நிலை ஆசிரியர் கல்வியும் தொடருறு ஆசிரியர் கல்வியும் ஒரு செயன்முறையின் கூறுகளாக உள்ளன.

எனவே தொடருறு ஆசிரியர் கல்வியானது தொடக்க நிலை ஆசிரியர் கல்வியைப் போல் மிகவும் முக்கியமானது. இலங்கையில் தொடருறு ஆசிரியர் கல்விக்கு பொறுப்பாக ஓர் அமைப்பு இன்மையால், நன்கு இணைப்பாக்கம் செய்யப்பட்ட சீரிய தொடருறு ஆசிரியர் கல்வி முறைமை இதுவரை உருவாக்கப்படவில்லை. பின்வரும் சூழ்நிலைகள் தொடருறு ஆசிரியர் கல்வியின் தேவையை வலியுறுத்துகின்றன:

தொடக்கநிலை ஆசிரியர் கல்வியில் பெறப்பட்ட அறிவும் திறன்களும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்களில் ஆசிரியர்கள் பரீட்சயம் கொள்ளவேண்டிய தேவை எழுகின்றமை.

புதிய தேர்ச்சிகளை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை தேசிய, உலகளாவிய அபிவிருத்திகள் மூலமாக ஏற்பட்டமை. ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தி இடைவெளிகள் இனங்காணப்பட்டு மேம்ப டுத்தப்பட வேண்டியுள்ளமை.

தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான கலைத் திட்டமொன்றை வடிவமைப்பதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தொடக்கநிலை ஆசிரியர் கல்வியில் ஏற்கனவே பெற்றுக்கொண்ட விடயங்கள் எவை என முதலில் அறிய வேண்டும். அதாவது ஆசிரியர்கள் முன்சேவைப் பயிற்சியின் போது அறிந்த விடயங்களைத் தொகுத்தால்தான் அவற்றைத் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டிய அறிவும் திறன்களும் எவையென இனங்காண முடியும்.

மேலும் ஆசிரிய நியமனம் பெற்ற பின்னர் வெளியிடப்பட்ட கல்வி சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் எவையெனவும் அறிந்தால் தான் அவற்றைத் தொகுத்து தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின்போது ஆசிரியர்களுக்கு வழங்கமுடியும்.

காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றியும் ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அம் மாற்றங்கள் பற்றி தெளிவான விளக்கம் இருந்தால்தான் அவற்றை வகுப்பறைக்கூடாக மாணவர்களுக்கு வழங்க முடியும். எனவே அண்மையில் ஏற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் எவையென தொடருறு கல்விக்கான ஒழுங்கமைப்பாளராக கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட கல்வியியலாளர் அறிந்திருந்தால்தான் அவ்விடயங்களை தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கமுடியும்.

இன்று தேசிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக கல்வித் துறை பாரிய அபிவிருத்தியைக் கண்டுவருகின்றது. இதற்கு ஏற்றாற்போல் இன்றைய ஆசிரியர்கள் வளப்படுத்தப்பட்டு தயார்ப்படுத்தப்படல் வேண்டும். எனவே இன்றைய கல்விநிலைமைக்கு ஏற்ற கல்வித் தேர்ச்சிகள் எவையெவையென இனங்காணப்படல் வேண்டும். இவ்வாறு இனங்காணப்பட்ட புதிய கல்வித் தேர்ச்சிகள் பொருத்தமானவாறு தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

இலங்கையை ஆட்சிபுரிந்த ஒவ்வோர் அரசியல் தலைமைகளும் தத்தம் அரசியல் இலாபத்திற்காக பலதரப்பட்ட ஆசிரிய நியமனங்களை அவ்வப்போது செய்துவந்துள்ளன. இவ் ஆசிரிய நியமனங்கள் ஓர் குறிக்கப்பட்ட நியதியின் அடிப்படையில் செய்யப்படாமையால் பல்வேறுபட்ட தரங்களுடன் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். மிகவும் குறைந்த தராதரத்துடனும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன (தொண்டர் ஆசிரிய நியமனங்கள்).

இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமெனில், ஆசிரியர்களின் தொழில் சார் அபிவிருத்தி இடைவெளிகள் இனங்காணப்பட்டு தராதர அடிப்படையில் பட்டியற்படுத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் ஒவ்வோர் தரத்திலுமுள்ள ஆசிரியர்களுக் குத் தேவையான விடயங்கள் அறியப்பட் டால், ஒவ்வொரு பிரிவினருக்கும் அவை தொடருறு கல்விகளூடாக வழங்கப்பட்டு அவர்களை இன்றைய கல்விமுறைக்கு ஏற்றதாக மேம்படுத்தி வளப்படுத்த முடியும். (தொடரும்)

**அ.குகன்**
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 84

**வீடொன்றை கட்டி முடிக்க 12 மனிதர்களுக்கு 14 நாட்கள் எடுக்கும். வேலையை ஆரம்பித்து 3 நாட்களின் பின்னர் மூவர் சுகவீனம் அடைகின்றனர். 5 நாட்களின் பின்னர் சுகவீனம் அடைந்தவர்களில் இருவர் மீண்டும் அவ்வேலையில் இணைந்து கொள்கிறார்கள். 8 நாட்களின் பின்னர் வேறு இருவர் சுகவீனம் அடைகின்றனர். அவ்வீட்டைக் கட்டி முடிக்க மேலதிகமாக எத்தனை நாட்கள் தேவை.**

**புதிர் 84 இற்கான விடைகளை 03.06 .2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
**ஆசிரிய கல்வியியலாளர்**
**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 82 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
கி.பிரஜீத்
விவசாய வீதி, சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்

**புதிர் 83 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
ஆர்.ஜனுசன்
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை, மானிப்பாய்


**புதிர் 82க்கானவிடை : 6 கிலோமீற்றர்**
**புதிர் 83 இற்கான விடை : 25 தேங்காய்கள்**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 84**

சரியான விடை:-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே.இல:........................................
கையொப்பம்:........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பர் 1 பணக்காரன்




மைக்ரோசாப்ட் அதிபர் பில்கேட்ஸ் மீண்டும் உலக பணக்காரர்களின் வரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். இவரது ஒரு நாள் வருமானம் சுமார் 100 கோடி ஆகும். இவரது மொத்த சொத்தின் மதிப்பு 73.3 பில்லியன் டொலர்கள் ஆகும். இவர் நினைத்தால் உலகில் உள்ள அனைவருக்கும் 15 டொலர் வீதம் கொடுக்கலாம். பில்கேட்ஸ் தனியாக ஒரு நாடையே உருவாக்கலாம், அந்த அளவுக்கு அவரிடம் பணம் கொட்டிக்கிடக்கறது.


## எல்ஈடி ஒளி கண்பார்வைக்கு ஆபத்து

தற்போது மிக அதிகமாக பயன்படுத்திவரும் எல்ஈடி விளக்குகளால் மனிதர்களின் கண் பார்வைக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பல ஆண்டுகளாக விலை குறைவான குண்டு பல்புகளைத்தான் மக்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால், இவை வெப்பத்தை அதிகளவில் உமிழ்வதாகவும், மின்சாரத்தை அதிகளவில் உறிஞ்சுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு மாற்றாக எல்ஈடி எனப்படும், "லைட் எமிட்டிங் டையோடு" விளக்குகள் அறிமுகம் ஆனது. இவை குண்டு பல்புகள் பயன்படுத்தும் மின்சாரத்தில் 5இல் ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்துவதாகவும், சுற்றுச்சூழலுக்கு மிக சிறப்பானது என்றும் கூறப்பட்டது. இதனால், ஐரோப்பிய யூனியனில் பல ஆண்டுகளுக்கு முன்பே குண்டு பல்புகளுக்கு தடை விதித்துவிட்டது. இந்தியாவில் 2009ஆம் ஆண்டில் 100 வாட்ஸ் குண்டு பல்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், செல்போன்கள், டிவி என்று பல்வேறு மின்னணு சாதனங்களில் எல்ஈடி பயன்பாடு அதிகரித்து விட்டது. தற்போது மக்களிடம் எல்ஈடி பல்புகளை பற்றி, மின்சாதன நிறுவனங்கள் தீவிர பிரசாரம் செய்து வருகின்றன. மேலும் சென்னையில் குடிசைகளுக்கு இந்த வகை பல்புகளை இலவசமாக வழங்குவது குறித்து மாநகராட்சியும் ஆலோசித்து வருகிறது. ஆனால், எல்ஈடி பல்புகளால் மனிதர்களின் கண் பார்வைக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர் தற்போது பகீர் தகவல் வெளியிட்டுள்ளார். மேட்ரிட்டில் உள்ள கம்ப்லூடென்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் செலியா சான்செஜ் ரமோஸ் என்பவர் தலைமையில் ஒரு குழு, எல்ஈடி பல்புகள் குறித்து ஆராய்ச்சி நடத்தி முடிவை வெளியிட்டுள்ளனர். இதுகுறித்து, ரமோஸ் கூறியிருப்பதாவது:

எல்ஈடி பல்புகள் சுற்றுச்சூழலுக்கு சிறப்பானது என்றாலும், அதில் இருந்து நீல மற்றும் செங்கருநீல (வயலட்) கதிர்கள் வெளியாகின்றன. இவை சிறிய அலை வீச்சை கொண்ட சக்திவாய்ந்த கதிர்கள். இவை அதிக சக்தி வாய்ந்தவை என்றாலும், குளுமையாக இருப்பதால் சாதாரணமாக அதை பார்த்து கொண்டிருக்க முடியும். இதுபோன்று எல்ஈடி விளக்குகளின் வெளிச்சத்தை பார்க்கும்போது, அது கண்ணின் விழித்திரையை பாதிக்கும்.

கண்கள், வெளிச்சத்தின் துணையுடன் பார்க்கக்கூடிய தன்மை கொண்டது. மாறாக வெளிச்சத்தை மட்டும் பார்க்கக்கூடியது அல்ல. எல்ஈடி விளக்குகள் உமிழும் வெளிச்சம் குளுமையாக இருப்பது போல் தோன்றினாலும், அத னால் கண் பார்வைக்கு ஆபதது அதிகம்." என்று கூறியுள்ளார்.



## மரக் கடிகாரம்

மரவேலைப்பாடுகளில் மன்னராக விளங்கும் உக்ரைனைச் சேர்ந்த Valerii Danevych எனும் நபர் மரத்தினால் தொழிற் படக்கூடிய கைக்கடிகாரம் ஒன்றினை உருவாக்கி அசத்தியுள்ளார்.

எனினும் இக்கடிகாரமானது நாள் ஒன் றிற்கு ஏனைய கடிகாரங்களுடன் ஒப்பிடுகையில் 5 நிமிட நேர வித்தியாசத்தை கொண்டிருப்பதுடன், 20 மணித்தியாலங்கள் வரை வலுவை சேமிக்கக் கூடிய மரத்தினாலான சில்லுகளையும் உள்ளடக்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.



## Windows 8.1

விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டம் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப் படுகையில், உலகில் 67 கோடி கணனிகளில், விண்டோஸ் 7 பயன்படுத்தப் படுவதாகவும், இவை யாவும், விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு மாறிவிடுவார்கள் என்று நம்பிக்கையுடன் கூறினார் மைக்ரோசொப்ட் நிறுவன தலைமை நிர்வாகி பால்மெர்.

ஆனால், அவர் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. பல மூலைகளிலிருந்து விண்டோஸ் 8 சிஸ்டத்தின் பல்வேறு கூறுகளுக்கு எதிர்ப்பு வந்தது. குறிப்பாக, ஸ்டார்ட் மெனு இல்லாதது குறையாகச் சொல்லப்பட்டது. பொது ஜன தொடர்பு நிறுவனங்கள் மூலம், மைக்ரோசொப்ட் மக்களிடம் தன் புதிய சிஸ்டத்தினைக் கொண்டு செல்லப் பார்த்தது. எந்த முயற்சியும் பலனளிக்காததால், தற்போது விண்டோஸ் 8 சிஸ்டத்தில் பல மாற்றங்களை மேற்கொண்டு, புதிய மேம்படுத்தப்பட்ட பதிப்பினை விண்டோஸ் புளு என்ற பெயரில் வெளியிட இருப்பதாகச் செய்திகள் வந்தன. தற்போது விண்டோஸ் 8.1 என அது வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் பட்டனை நீக்கியது, அதற்குப் பதிலாகச் சதுர கட்டங்கள் வழி அப்ளிகேஷன் புரோகிராம்களைத் தந்தது, கணனி இயக்கம் தெரிந்தவர்கள் கூட புதிய விடயங்களைச் சிரமம் எடுத்து கற்க வேண்டிய நிலை ஆகியவற்றால், விண்டோஸ் 8 எதிர்பார்த்தபடி மக்களை அடையவில்லை. துரதிர்ஷ்டவசமாக, மைக்ரோசொப்ட் நிறுவனம் இதனை உணர்ந்து கொள்ள ஆறு மாதம் பிடித்தது. மேலும், பல நிறுவனங்கள் தங்கள் பழைய விண்டோஸ் சிஸ்டத்திலேயே இயங்க முடிவெடுத்தன. இன்னும் பல பிரிட்டன் நிறுவனங்கள், விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்திலேயே தங்கள் கணனிகளை இயக்குகின்றனர்.


மேலும், மைக்ரோசொப்ட் விண்டோஸ் 8 சிஸ்டத்தின் அடிப்படையிலேயே, டேப்ளட் கணனிகளையும் இயக்கும் வகையில், சிஸ்டத்தினை வடிவமைத்தது. இதனை ஒரு சிறப்பான அம்சமாக எடுத்துரைத்தது.

மைக்ரோசாப்ட் எப்போதும், தன் சிஸ்டங்களில், அதி நவீன வசதிகளைத் திணிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும். ஆனால், அவை தெளிவற்றும், திறன் குறைவாகவுமே இருக்கும். விண்டோஸ் விஸ்டா வெளிவந்தபோது, விட்ஜெட் என்ற வகை வசதிகள் இந்த வகையில் இருந்தன. இவை டெஸ்க் டொப்பில் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருந்தன. ஆனால், திறனில் கோட்டைவிட்டன. ஒபீஸ் தொகுப்பில் காணப்படும் புதிய வழிமுறைகளும் இதே போல, சிஸ்டத்தின் செயற்றனை முடக்கிப் போட்டன.

விண்டோஸ் 8 பொறுத்தவரை, அது டச் ஸ்கிறீன் செயற்பாடு மற்றும் டெஸ்க்டொப் வகை செயற்பாடு என இருவகைக்குமாக அமைக்கப்பட்டு தரப்பட்டுள்ளது. சில புரோகிராம்கள் தொடுதிரை செயற்பாட்டில் இயங்குகின்றன. சில டெஸ்க்டொப் வகையில் மட்டுமே இயங்குகின்றன. இதனால், இரு வண்டிகளில் பயணிக்கின்ற அவஸ்தையை மக்கள் அனுபவித்தனர். பலர் எந்த வண்டியும வேண்டாம் பழைய வாகனமே போதும் என விண்டோஸ்7 பக்கம் திரும்பினர்.

புதியதாக விரைவில் வெளியிடப்பட இருக்கும் விண்டோஸ் 8.1 மேம்படுத்தப்பட்ட சிஸ்டத்தில் இந்த குறைகள் களையப்பட்டுக் கிடைக்கும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

## 3D மவுஸ்கள்




இனிமேல் உங்கள் செயல்களை எளிதாக கணனிக்கு தெரியப் படுத்தும் வகையில் 3D மவுஸ்கள் விரைவில் வரவிருக்கிறது. இந்த மவுசை மோதிரம் போன்று கையில் அணிந்து கொண்டால் போதும். எளிதாக உங்களது செயற்பாடுகளை கணனிக்கு தெரியப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைப் படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

செங்கலடி நகரில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி ஏ.எம்.றியால் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

பிரபல வர்த்தகர் சிவகுரு மற்றும் அவரது மனைவி சுந்தரமூர்த்தி விப்ரா ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் தமது வீட்டில் கோரமான முறையில் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இக்கொலை தொடர்பாக பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி இருவரது இளைய மகளையும் செங்கலடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இக்கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட பொருட்களை இரசாயனப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பியதற்கான அறிக்கையை ஏறாவூர் பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர். (அ-2)

# மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பை சட்டமா அதிபர் எதிர்க்கமுடியாது

## ஜே.வி.பியின் பிரசார செயலாளர்

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிர்ப்பை வெளியிட சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவிப்பை இரத்துச் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்த மனுவில் எந்தவொரு வகையிலும் தொடர்புபடாத சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிர்ப்பை வெளியிட முடியாது. சட்டத்தில் அதற்கான இடமில்லை.

எனவே, சட்டமா அதிபரின் மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்யவேண்டும்.

முன்னாள் சட்டமா அதிபர் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையை இரத்துச் செய்யுமாறு அவர் கோரியுள்ளார். (அ-2)

# உட்கட்டமைப்பு பணிகளுக்காக 580 மில். டொலர் உதவி சீனா வழங்கியது

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய உட்கட்டமைப்புப் பணிகளுக்காக சீனா 580 மில்லியன் டொலர் களை வழங்கவுள்ளதாக றொய்ட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

றொய்ட்டர் செய்திச் சேவை இலங்கையின் அரசாங்க அதிகாரி ஒருவரைக் கோடிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

கடன் அடிப்படையில் வழங்கப்படும் இந்த நிதியுடன் இலங்கைக்கு சீனா வழங்கும் கடன் தொகை 1.4 பில்லியன் டொலர்களாக உயர்கிறது. இந்நிலையில் சீனா இலங்கைக்கு வழங்கும் நிதியுதவி இந்திய நலன்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அச்சேவை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை புதிதாக வழங்கப்படும் 580 மில்லியன் டொலர்களில் 300 மில்லியன் டொலர்கள் வீதி அபிவிருத்திக்கும் 200 மில்லியன் டொலர்கள் விநியோக பணிகளுக்காகவும் ஒதுக்கப்படவுள்ளன. (அ-2)

# சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவன் நானே-மேர்வின்

களனித் தொகுதியில் மீண்டும் தனது அரசியல் பணிகளை முன்னெடுக்கப் போவதாக பொதுமக்களின் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தான் எந்நேரமும் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசியல்வாதி எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேர்வினுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் களனித் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவியிலிருந்து அவர் முன்னர் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அலுவலகங்களின் கல்விச்சுற்றுலா

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலயக்க ல்விப்பணிமனையைச் சேர்ந்த அலுவலர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கொய்க்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் ,கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் இக் கல்விச் சுற்றுலா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக திணைக்கள அலுவலர்களின் சுற்றுலா முடிவடைந்துள்ளது.

அடுத்த கட்ட அலுவலர்களின் கல்விச் சுற்றுலா நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப் பட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் மட்டுமே கொய்க்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தின் முயற்சியுடன் ஆரம்பப் பாடசாலைகளுக்கு கட்டம் அமைக் கும் வேலைத் திட்டம் நடைபெற்று வருகின்றமைஇதன் சிறப்பம்சம் ஆகும். (அ-3-254)

# விஞ்ஞான சங்கத்தின் நிர்வாகக் குழு விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 2013-2014 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தலைவர் திருமதி ச. ரவீந்திரன், தெரிவுத் தலைவர் பேராசிரியர் திருமதி சி.குகநாதன், பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன், உதவி பொதுச் செயலாளர் கலாநிதி ப.செல்வேள், பொருளாளர் கலாநிதி திருமதி அ.சிவரூபன், உதவிப் பொருளாளர் திருமதி கு.நிரஞ்சன், பத்திராதிபர் அ.இராசகுமாரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிரிவுகளுக்கான தலைவர்களின் விபரங்களின் அடிப்படையில் பிரிவு A தூய விஞ்ஞானத் தலைவர் கலாநிதி த.ஈஸ்வர மோகன், பிரிவு B பிரயோக விஞ்ஞானத் தலைவர் கலாநிதி திருமதி து.மிகுந்தன், பிரிவு C மருத்துவ விஞ்ஞானத் தலைவர் வைத்திய கலாநிதி பே.அ.டி. கூங்கே, பிரிவு D சமூக விஞ்ஞானத் தலைவர் வீ.குமரதீபன் ஆகியோர் தெரிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோதமாக பொருட்கள் இறக்குமதி;சுங்கப் பிரிவு முறியடிப்பு

(கொழும்பு)

முதலீட்டு சபையின் ஆவணங்களைப் போலியாகத் தயாரித்து அவை மூலம் சட்ட விரோதமாக நாட்டிற்குள் பொருட்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கையொன்றை சுங்க அதிகாரிகள் முறியடித்துள்ளனர்.

குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த தரப்பினர் தொடர்பாக சுங்கத் துறையினருக்கு தகவல்கள் அண்மையில் கிடைக்கப்பெற்றிருந்தன.

சுங்க வருமான கண்காணிப்புப் பிரிவினர் மேற்கொண்ட நீண்ட கால விசாரணைகளின் அடிப்படையில் இந்த சட்டவிரோத இறக்குமதி செயற்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி போலி ஆவணங்களுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி 40 இலட்சம் ரூபாய் என்ற சுங்கத் திணைக்கள பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்துள்ளார்.(அ-2)

# அன்னதானங்கள் பரிசோதிக்கப்படும்

வெசாக் பண்டிகையின் போது கொழும்பு நகரில் வழங்கப்படவுள்ள தன்சல் எனப்படும் அன்னதான நிகழ்வுகள் தொடர்பான சுகாதார உணவுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு நகரசபையின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அன்னதானத்திற்காக சமைக்கப்படுகின்ற உணவுகளின் மாதிரிகள், சுகாதாரப் பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனக் குறித்த பிரிவு தெரிவித்துள்ளது.

வெசாக் அலங்காரங்களை பார்வையிடுவதற்காக கொழும்புக்கு வருகை தரும் மக்களின் சுகாதார நலனைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியாக ஸ்தாபிக்கப்படவுள்ள அன்னதானம் வழங்கும் ஏனைய இடங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)






இலங்கை குடியரசு தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வடமாகாண பிரதம செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொது வடமாகாண பிரதம செயலாளர் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்ற பிரதிப் பிரதம செயலர் (நிர்வாகம்) மாகாணக் கொடியை ஏற்றுவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் காட்டிய வழி



ஆன்மீகம் 13

23.05.2013 தொடர்ச்சி...

ஏறசிங்கிபோல், இறங்கு சிங்கி என்ற வகையும் உண்டு. அதை எடுத்து வாருங்கள். இன்று. இரவு நடக்கும் யாககுண்டத்தில் இதைப் போட்டால், தேவர்களும், சித்தர்களும், சப்த கன்னியரும் வசியமாகி விடுவார்கள். யாககுண்டத்தைச் சுற்றி மகிழ்ச்சியுடன் கும்மியடித்து பாடுவார்கள் என்றார். அன்று அன்ன தானம் என்னுடைய பணி அல்லவா.


சமையல் நடந்து கொண்டிருக்கும் போது, குழம்புக்கு உப்புப் போட உப்பை தேடினோம், கிடைக்கவில்லை. உப்பு வாங்கவே இல்லை என்ற உண்மை புரிந்தது. திகைத்துப்போனோம். "உப்பில்லாப் பண்டம், குப்பையிலே என்ற பழமொழி என்னைக் கேலி செய்தது!" வேறு வழியில்லை மற்றவர்களுக்கு தெரிந்தால் கேலிக்கிடமாகும். ஆதலால் சித்தரையே சரணடைந்தேன்.

சித்தர் கூறினார்: உப்பில்லாப் பண்டம் குப்பையிலே. அருகிலிருந்து இதைக்கேட்ட 60 வயதான சித்த வைத்தியர் திருவாவடுதுறை செல்ல முத்துஜயா தன் இடுப்பில் எப்படிதான் இந்த உப்புப்பை வைத்திருந்தார்களோ, தெரியவில்லை. அதை எடுத்து சமையலில் போட்டார். உப்பு சுவை கூடியது. எனக்கு பரீட்சையில் இறைவனே பாசாக்கி விட்டார்கள் என்ற மகிழ்ச்சி.

தருமமே உருவான காந்திமகான் நோட்டுகளை கள்ளத்தனமாக சேர்த்தும் ஏழைகளுக்கும், மற்றவர்களுக்கும் உதவாத மனித கூட்டத்தில் அடியேன் சேர்ந்து சின்னா பின்னமாகி இருந்ததால், இதைப்போல் தருமசிந்தனை வந்திருக்குமா? அதுவும் எங்கே? எப்படி? செய்தால் நன்மை பயக்கும் எனற மாபெரும் படிப்பு படித்ததுபோல் சித்தருடன் இருக்கும் வாய்ப்பு, எத்தனை ஜென்மத்திற்கு நன்றிக் கடனாகவே வாழ்வேன். குருவின் திருவருளை நினைத்து மனம் உருகினேன். அனைத்தும் உணர்ந்த சித்தர் "ராஜா சாப்பாடு ராஜா சாப்பாடுதான்" என்றார்.

அன்று இரவு நாங்கள் தங்குவதற்காக, ஒரு இடத்தை சித்தர் சுவாமிகளே தேர்ந்தெடுத்தார்கள். யாக குண்டம் மூட்டப்பட்டது. எல்லோரும் சுற்றி அமர்ந்தோம். யாகத்தீயில் ஏறுசிங்கி கட்டையை போட்டோம். யாகம் நடக்க, நடக்க என்கண் முன்னே பலவிதமான அற்புதக் காட்சிகள் தோன்றின. பலதெய்வீக குழந்தைகள், யாககுண்டத்தை சுற்றி கும்மி ஆடிய காட்சி, இதைக் கேட்டவர்கள், கம்பியூட்டர் காலத்தில் கதை விடுகிறான், என்று கேலி பேசுவார்கள். அதைப்பற்றி கவலை எனக்கு இல்லை. அதைக் காண்பதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும். அந்த பாக்கியத்தை அருளியவர் சித்தர் பெருமான் அல்லவா! அவருடைய சித்து விளையாட்டுக்களை பாமரன் புரிந்து கொள்வது மிகவும் கடினம். அதிலும் புத்தகம் படித்தவர்கள் தெளிவது கடினம்.

ஒரு இடத்தில் மரங்கள் செடிகள் எல்லாம் காய்ந்து போய் சோகமாக நின்றன! இதைக் கண்டு மனம் வாடிய நான் பசுமைக்கு பெயர்போன இம்மலையில் இப்படி சில இடங்கள் காய்ந்து கிடப்பதேன்? என்று சித்தர் பெருமானிடம் கேட்டேன். அதற்கு "அவர் என்ன செய்வது காலவித்தியாசம், நாட்டில் ஜனத்தொகை பெருகிவிட்டது. ஆனால், பிழைப்பிற்கான சரியான வழியில்லை. இதனால் சிலர் குறுக்கு வழியில் குபேரனாக செய்யும் முயற்சிகளின் வெளிப்பாடே, நீங்கள் பார்க்கும் இந்தக் காட்டின் சோகம். திருட்டுத்தனமாக விலையுயர்ந்த மரங்களை



வெட்டிக் கடத்தி விற்கிறார்கள்" என்றார்! காட்டிலாகா அதிகாரிகள் இவைகளை தடுக்க மாட்டார்களா? என்றேன். பாவம் அவர்களும் மனிதர்கள்தானே! கள்வன் பெரிசா? காப்பான் பெரிசா? என்ற கேள்வி காலம்காலமாக கேட்கப்பட்டு வந்தாலும் செயலில் கள்வன் என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது! ஊருக்கு காவல்துறை இருந்தும் களவுகளும், குற்றங்களும் வளமாகத்தானே இருக்கின்றன! திருடர்கள் திருடிக்கொண்டே இருப்பார்கள். அதைக் காக்கி சட்டை போட்ட கூட்டம் தடுக்க முயன்றுகொண்டே இருக்கும்.

நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து கொண்டே இருக்கும். வழக்கறிஞர்கள் வாதாடிக்கொண்டே இருப்பார்கள். தீர்ப்புகளும் வழங் கப்படும். கீழ்க்கோர்ட்டு, மேல்க் கோர்ட்டு, உச்சநீதிமன்றம் என்று வழக்குகள் வருடக் கணக்கில் பயணிக்கும். சிலருக்கு நீதிகிடைப்பதும் உண்டு. பெரும்பாலான குற்றவாளிகள்,

**அன்னை சித்தர்**
**இராஜ்குமார் குருஜி**

சட்டத்தின் ஓட்டை வழியாக தப்புவதும், தவறுவதும் இல்லை. நீதிமன்றங்களின் கையில் நியாயத்தராசு ஏந்தி நீதிதேவதை சிலையாக நின்று கொண்டே இருக்கிறாள். ஆனால், அவள் கண்கள்தான் கருப்புத்துணியால் கட்டப்பட்டு இருக்கின்றது. என்ற பதிலை சித்தர் பெருமானார் சொன்னார். நம்முன்னோர்கள், மரத்தின் பெருமை அறிந்து, அதை தெய்வமாக வணங்கினார்கள். அதன் மருத்துவ குணத்திற்காக அவைகள் போற்றி காப்பாற்றப்பட்டன!

(தொடரும்)

# தீர்க்கப்பட முடியாத சிக்கலாக உயர்பாதுகாப்பு வலயம்



23.05.2013 தொடர்ச்சி...

வடக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னர் கணிசமான படையினரை விலக்கிக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறியது. அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே வடக்கு, கிழக்கிலும் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறியது.

வடக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னர், படையினர் விலக்கப்பட்டனர் என்பது உண்மையே. ஆனால், அது எந்தளவு படையினர் என்பதே முக்கியமான கேள்வி. 53 ஆவது டிவிசனின் ஒருபகுதி தெற்குப் பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளது. 63 ஆவது டிவிசன் அல்லது அதிரடிப் படை 3 அக்கரைப்பற்றுக்கு நகர்த்தப்பட்டது. 58ஆவது டிவிசனின் ஒரு பகுதி கிழக்கிற்கு நகர்த்தப்பட்டது.

இவை தவிர, டிவிசன், பிரிகேட் மட்டத்தில் பெரியளவிலான பின்வாங்கல் ஏதும் இடம்பெறவில்லை.

ஒரு காலத்தில் 40ஆயிரம் படையினர் நிலைகொண்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது 13,200 படையினர்தான் உள்ளனர் என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால், அங்கு 3 இராணுவ டிவிசன்கள் நிலை கொண்டுள்ளன.

இலங்கை இராணுவத்தின் ஒரு இராணுவ டிவிசனில் குறைந்தது 8000 படையினர் இருப்பது வழமை. ஆனால், அரசாங்கம் கூறும் கணக்குப்படி பார்த்தால், ஒரு டிவிசனில் 4400 படையினர்தான் இருக்க முடியும். இந்தக் கணக்கு இராணுவ நியமங்களை நகைப்புக்குள்ளாக்குவதாக உள்ளது.

போர்க்காலத்தில், படையினர் அழிவுகளை சந்தித்திருந்தபோதுகூட, இப்படியொரு நிலையில் எந்தவொரு டிவிசனும் இருந்ததில்லை. வன்னியைப் பொறுத்தவரையில், வன்னி, முல்லைத்தீவு, கிளிநொச்சி என மூன்று படைத் தலைமையகங்கள் உள்ளன. முல்லைத்தீவில் 31 பற்றாலியன்களும், கிளிநொச்சியில் 39 பற்றாலியன்களும், வன்னியில் 43 பற்றாலியன்களும் நிலைகொண்டுள்ளன. இதன்படி வன்னிப் பிரதேசத்தில் மட்டும் மொத்தம் 113 பற்றாலியன் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

கிழக்கைப் பொறுத்தவரையில், 49 பற்றாலியன் படையினர் நிலைகொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 35 வரையிலான பற்றாலியன்கள் நிலைகொண்டிருக்கலாம் என்று மதிப்பிடுகின்ற நிலையில், இலங்கை இராணுவத்தில் மொத்தமுள்ள பற்றாலியன்களில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று மடங்கு வடக்கு, கிழக்கிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

இதுதவிர, நாட்டின் மொத்த கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கைக்கொண்ட வடக்கு, கிழக்கில் சுமார் 55ஆயிரம் பேர்கொண்ட இலங்கைக் கடற்படையினர், மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான படையினர் நிறுத்தப்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளன.

சுமார் 30 ஆயிரம் பேர்கொண்ட விமானப் படையைப் பொறுத்தவரையில், மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாதளவு படையினரை வடக்கு, கிழக்கில் நிறுத்தியுள்ளது.

இது நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்ற படைச்செறிவா என்று வெளிநாடுகள் பதில் கேள்வியை எழுப்ப வசதியாகவிட்டது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இப்போது படைவிலக்கம் நடந்துள்ளது என்பதையோ, ஏனைய பகுதிகளைப் போலவே அங்கும் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்பதையோ நம்பகரமான முறையில் உறுதிப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால்தான், இப்போது, படையினரை நிறுத்துவதும், தளங்களைப் பேணுவதும் அரசாங்கத்தின் தனியுரிமை, அதில் எந்த வெளிநாடும் தலையிட முடியாது என்ற கருத்தை வலியுறுத்த ஆரம்பித்துள்ளது.

ஒரு இறைமையுள்ள நாட்டிற்கு இத்தகைய தனியுரிமை, சுதந்திரம் உள்ளது என்பது உண்மையே. ஆனால், நாட்டின் இறைமை, சுதந்திரம் என்பது இன்னொரு நாட்டின் கதவுகளைத் தட்டாதவரைதான் நிலைத்திருக்கும் என்பதை உலக நடப்புகள் நிரூபித்துள்ளன.

ஒரு வீட்டுக்குள் நடக்கும் சண்டைகளில் பொலிஸாரோ வெளியாரோ தலையிடும் வழக்கமில்லை. ஆனால் அது வீட்டுக்கு வெளியே வந்துவிட்டாலோ, அல்லது அது குறித்து அயலவரிடம் அல்லது பொலிஸாரிடம் முறையிடப்பட்டாலோ அது பொதுவான விவகாரமாகிவிடும்.

அதுபோலத்தான், பிரச்சினைகள் அரசாங்கம் உள்ளுக்குள் தீர்த்துக் கொள்ளத் தவறியுள்ளதால், வெளிநாடுகளின் கதவுகளைத் தட்ட ஆரம்பித்துள்ளது.

உயர்பாதுகாப்பு வலய காணி சுவீகரிப்பு விவகாரத்தை உள்நாட்டு பாதுகாப்பு என்றும், அதில் யாரும் தலையிட முடியாதென்றும் அரசாங்கம் நியாயப்படுத்தினாலும், இந்த விவகாரம் ஆயிரக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையது என்பதால் சர்வதேசத்தின் கவனத்தில் இருந்து முற்றிலும் மறைத்து விடமுடியாது. அத்துடன் ஆயிரக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து, அரசாங்கம் காணி சுவீகரிப்புகளையும் இராணுவமயமாக்கலையும் உலகளவில் நீண்டகாலத்துக்கு நியாயப்படுத்திக்கொள்ளவும் முடியாது.

-கே. சஞ்சயன்-

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

465

## மனதின் நினைப்பு



விதிசா என்னும் நகரை விவேகநந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் தினந்தோறும் தன் உப்பரிகையின் மேலிருந்து தெருவைப் பார்ப்பான். தினமும் அவன் ஒரு விறகு வெட்டி காலையில் தன் கோடரியை எடுத்துக் கொண்டு போவதையும், மாலையில் விறகுக்கட்டுடன் திரும்பி வருவதையும் பார்த்தான்.

தினமும் அவனைப் பார்க்கும் அரசனின் மனம் காலை வேளைகளில் "ஐயோ பாவம்! எவ்வளவு கஷ்டப் படுகிறான் வயிறு வளர்க்க! இவன் சம்பாத்தியம் இவனது குடும்பத்தைக் காப்பாற்றக் கூடப் போதுமா என்னவோ?" என எண்ணிக் கொள்ளும். ஆனால், மாலை வேளைகளில் அவனது அதே மனம் "இவன் ஒரு மகாபாவி. இவனைப் போன்றவர்களைக் கட்டிவைத்து தோலை உரித்தாலும் கவலையில்லை." என்றே நினைக்கும். ஒரே மனிதனைப் பார்க்கும் அவனது மனம் ஏன் வெவ்வேறுவிதமாக நினைக்கிறது என்று அவன் யோசித்துப் பார்த்தான். அவனுக்கு



அதற்குச் சரியான காரணம் தென்படவில்லை. எனவே, தன் மந்திரியைக் கூப்பிட்டுத் தன் மனதில் எழுந்த சந்தேகத்தைக் கூறினான். அவனும் அதற்கு மூன்று நாட்களுள் விடை கூறுவதாகக் கூறிச் சென்றான்.

மறுநாள் மந்திரி ஒரு எளிய மனிதனைப்போல வேடம் பூண்டு அதிகாலையில் அந்த விறகுவெட்டியை, பின்தொடர்ந்து சென்றான். நாள்முழுவதும் அவன் பாடுபடுவதை நேரில் கண்டுவிட்டு மாலை வேளையில் அவன்பின்னாலேயே வீடு திரும்பினான். அப்போது அரசனது மனம் அவனுக்காக ஏன் இரக்கப்படுகிறது என்பதற்குதக்க காரணம் தெரிந்துவிட்டது. இனி, அவனைப் பற்றி நேர்மாறாக மாலை வேளைகளில் ஏன் நினைக்க வேண்டும் என்பதைக் காண மறுநாள் ஒரு சன்னியாசிபோல வேடம் பூண்டு அந்த விறகு வெட்டியின் வீட்டிற்குச் சென்றான்.


விறகுவெட்டியின் மனைவி அச்சன்னியாசியை வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்று அவருக்கு முறைப்படி உபசரித்தாள். அப்போது சந்தனக் கட்டையின் வாசனை கம்மென அவ்வீட்டனுள் இருந்து வந்தது.

அவனும் "ஒகோ, இங்கு சந்தனக் கட்டைகள் நிறைய அடுக்கி வைத்திருக்கிறாய் போலிருக்கிறதே. அவற்றை விற்றாலே சுகமாக காலம் கழிக்கலாமே. இப்படி ஏன் கஸ்டப்படவேண்டும்?" என்றான்.

அதற்கு அந்த விறகுவெட்டியின் மனைவி "உஷ், உரக்கப் பேசாதீர்கள். என் கணவர் விறகு வெட்டும்போது ஒரிரு சந்தனக் கட்டைகளையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு வந்துவிடுவார். அக்கட்டைகளை மட்டும் எடுத்து ஒரு அறைக்குள் போட்டு சேர்த்து வருகிறோம். சந்தனக்கட்டைகளை யாராவது அரசர் இறந்தாலே அவருடைய உடலை எரிக்க வாங்கிக் கொள்வார்கள். அப்போது எந்த விலை கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள்.

இப்போது போதிய கட்டைகள் சேர்ந்தாகிவிட்டன. என் கணவர் தினமும் இந்நாட்டு மன்னன் எப்போது இறப்பான் என்றே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார் " என்றாள்.

அப்போது மந்திரிக்கு அரசனின் மனம் ஏன் விறகு வெட்டியை வெறுக்கிறதென்பதற்கான காரணமும் தெரிந்துவிட்டது. காலையில் விறகு வெட்டி தன் பிழைப்பை நினைத்துக்கொண்டே போகிறான். மாலையில் வரும்போது சந்தனக்கட்டைகளை நினைத்துக்கொண்டே வருகிறான். இதனால்தான் அரசனின்




மனமும் எப்படியோ ஏற்பட்ட பிணைப்பால் அந்த விறகு வெட்டி எண்ணுவதற்குத் தக்கபடி மாற்றம் அடைகிறது.


சன்னியாசி வேடத்திலிருந்த மந்திரி அங்கிருந்து கிளம்பி தன் வீட்டிற்குப் போனான். மூன்றாவது நாள் அரசனின் முன்சென்று "அரசே எனக்கு உண்மையான காரணம் தெரிந்துவிட்டது. அதாவது, விறகு வெட்டி தன் உள்மனதில் நினைப்பது அவனையும் அறியாமல் எப்படியோ உங்கள் உள்மனம் தெரிந்து கொண்டு விடுகிறது.

காலைநேரத்தில் அவன் மனப்போக்கு ஒருவிதமாக இருக்கையில், மாலை வீடு திரும்புகையில், அதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. ஆனால், நீங்கள் அந்த விறகுவெட்டியை ஒன்றும் செய்யாமல் விட்டால் நான் விளக்கமாக கூறுகிறேன்" என்றான். .

அரசனும் அவ்விதம் வாக்கு அளிக்கவே மந்திரியும் உண்மை நிலையைக் கூறினான். அரசன் விறகு வெட்டியை வரவழைத்தான். அவனுக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து சுகமாக வாழும்படி செய்ய அவனது கஷ்டமும் தொலைந்தது. அவன் அரசனைப் பற்றியோ தான் சேர்த்து வைத்த சந்தனக் கட்டைகளைப் பற்றியோ நினைக்கவில்லை.

## அம்புலிமாமா கதைகள்

## பொய், உண்மை இல்லை



உண்மை என நம்பும்படி பொய் சொல்பவனுக்கு ஒரு தங்க மாம்பழம் பரிசு கொடுப்பதாக மன்னன் தன் நாட்டில் பறைசாற்றுவித்தான்.

தங்க மாம்பழம் பெற ஆசைப்பட்டு எவ்வளவோ பேர் அரசன் முன்வந்து பலவிதமாகப் புழுகிப் பார்த்தனர். ஆனால், அவற்றையெல்லாம் அரசன் கேட்டு திருப்திப்படவில்லை. ஏனெனில், அவற்றில் கொஞ்சம் உண்மை கலந்திருப்பதுபோல அரசனுக்குப்பட்டது.

ஒருநாள் பிச்சைக்காரன் அரசனிடம் வந்தான். அரசன் "என்னப்பா உனக்கு வேண்டும்?" என்று கேட்க, அவனும் "நீங்கள் என்னிடம் ஒரு பானை நிறைய தங்க நாணயம் கடன் வாங்கிக் கொண்டீர்கள். அதைத் திருப்பிக் கொடுங்கள் " என்றான்.

அப்போது அரசன் "முழுப்பொய்? உன்னிடம் கடன் வாங்கியதுபோல எவ்வளவு நன்றாக கயிறு திரிக்கிறாய்? நான் ஒன்றும் கொடுக்க மாட்டேன் போ " என்றான்.

உடனே பிச்சைக்காரன் "பொய்தானே. ஆனால், இது உண்மையென நீங்கள் நினைக்கும்படி செய்து உங்கள் வாயிலும் அதனை வரவழைத்துவிட்டேன். எனக்குக் கொடுங்கள் தங்க மாம்பழத்தை." என்றான். அரசனும் பதில் பேசாமல் தங்க மாம்பழத்தை அப்பிச்சைக்காரனுக்கு கொடுத்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2013-14.06.2013



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,
திருவாதிரை, புனர்பூசம்
1,2,3 ஆம் பாதங்கள்

பயணங்களால்
பலன் கிடைக்கும்!

## பயணங்களால் பலன் கிடைக்கும்!

**பிறர் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ளும் மிதுனராசி நேயர்களே**

உங்களுக்கு இந்த வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்துபார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே கிரக நிலைகள் சஞ்சரிக்கின்றன. விரய ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்ரன், வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் உள்ளன. லாப ஸ்தானத்தில் கேதுவும் செவ்வாயும் சஞ்சரிக்கிறார்கள்.

தனாதிபதி இராசியில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். என்றாலும் வரவு வந்த மறுநிமிடமே செலவாகிவிடலாம். குருப்பெயர்ச்சிவரை இதே நிலை நீடிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் இடமாற்றம், ஊர்மாற்றம் எதிர்பார்த்தபடி வந்துசேரலாம்.

ஒருசிலருக்கு நாடு மாற்றங்கள், வீடுமாற்றங்கள் கூட வரலாம். குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு பலம் அதிகம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். புத்ர ஸ்தானம், களத்திர ஸ்தானம், பிதுர் ராஜ்ஜிய ஸ்தானம் ஆகிய எல்லாம் புனிதம் அடைந்து நல்ல பலனை கொடுக்கப்போகின்றன. எனவே, வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். வருமானம் திருப்தி தரும். கனிவோடு வாரிசுகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

இராகு சனி இரண்டையும் பெயர்ச்சியாகும் குரு பார்க்கப்போகிறது. எனவே, பிள்ளைகளால் இதுவரை ஏற்பட்ட தொல்லைகள் அகலும். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் விலகும். பலமுறை பஞ்சாயத்து வைத்தும் பாகப்பிரிவினைக்கு ஒத்துவரவில்லையே என்று நினைத்த நீங்கள், இப்பொழுது நெஞ்சம் மகிழும் விதத்தில் கிடைக்க வேண்டிய சொத்துக்கள் கிடைத்து மகிழ்ச்சியடையப் போகிறீர்கள்.

பெயர்ச்சியாகும் குருவை குருப்பெயர்ச்சி நாளன்று அருகிலிருக்கும் சிவாலயத்துக்கும் புராதன கோவில்களுக்கும் சென்று வழிபட்டு வாருங்கள்.

**இடப செவ்வாயின் சஞ்சாரம்!**

மே 21 ஆம் திகதி இடப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். லாபாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எதிர்பாராத விரயங்கள் சிலவற்றை சந்திக்க நேரிடும். சகோதரர்களுக்காகவும் அவர்களை சார்ந்தவர்களுக்காகவும் ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். உத்தியோக மாற்றம் ஒருசிலருக்கு ஏற்படலாம். விருப்ப ஓய்வு பெறும் எண்ணம் ஒரு சிலருக்கு வரும்.

**மிதுன புதனின் சேர்க்கை!**

மே 25 ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் பலம் பெறும் இந்த நேரத்தில் உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்!**

மே 28 ஆம் திகதி மிதுனத்தில் குரு சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியிலிருந்த பிரச்சினைகள் அகலும். புத்திரப் பேறு வேண்டி காத்திருப்பவர்களுக்கு அது வாய்க்கும். பிரிந்து சென்றவர்கள் வந்திணைவர். பங்காளிப் பகை மாறும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் இலாபம் காண்பீர்கள்.

பூர்வீக சொத்துக்களில் இருந்த வீடு, கடை போன்றவற்றை விரிவு செய்து கட்டக்கூடிய வாய்ப்பு உருவாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அரசியலில் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு பதவிகளிலும் பொறுப்புகளிலும் மாற்றம் ஏற்படும் சூழ்நிலை உண்டு.

மே 30 ஆம் திகதி மிதுனத்தில் சுக்ரனும் இணையப்போகிறார். அசுர குருவும் தேவகுருவும் ஒருங்கிணையும் இந்த நேரத்தில் எதிர்பாராத வரவு வந்து மகிழ வைக்கும். இம்மாதம் புதன்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

# சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் 4 ஆம் பாதம்,
பூசம், ஆயிலியம்

எதிர்பாராத தனலாபம்
இல்லம் தேடிவரும்

## எதிர்பாரா தனலாபம் இல்லம் தேடிவரும்!

**பொதுநலத்தில் ஈடுபட்டு புகழ் குவிக்கும் கடக இராசி நேயர்களே**

வைகாசிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சந்திரன் மாதத்தொடக்கத்திலேயே விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரயாதிபதி புதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் செலவுக்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். செவ்வாய் பலம் பெற்றிருக்கிறார். எனவே, தொழில் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றிகிடைக்கும்.

அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கமும் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கமும் மேலோங்கி இருப்பதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது.

அதேநேரத்தில் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதும் ஒருவழிக்கு யோகம்தான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப இழப்புகளை ஈடுசெய்ய ஏதேனும் ஒருசில புதிய வாய்ப்புகள் வந்துசேரும்.

சென்ற மாதத்தைவிட இந்தமாதம் பொருளாதார விருத்தி அதிகரிக்கும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். எதிர்கால நலன் கருதி சேமித்த தொகையில் பாதிக்கு மேல் கரைந்துபோனதே என்று கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சி அடையும் விதத்தில் குருப்யெர்ச்சிக்குப் பிறகு பணவரவு கூடுதலாகவே வந்துசேரும். இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

அரசியல் மற்றும் பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கு திடீரென புதிய பொறுப்புகளும் பதவி மாற்றங்களும் வந்து சேரலாம். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடும் வெற்றிக்கிழமைதோறும் துர்க்கை வழிபாடும் மேற்கொண்டால் சொல்லை செயலாக்கிக் காட்டுவதில் இருந்த தடை அகலும்.

**இடப செவ்வாயின் சஞ்சாரம்!**

மே 21 ஆம் திகதி இடப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசியை பொறுத்தவரை 5,10 ஆகிய இடங்களுக்கு செவ்வாய் அதிபதியாகிறார். எனவே, பிள்ளைகள் வழியில் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங்களும் வந்து சேரும். பூமி விற்பனையால் லாபம் உண்டு. பாதியில் நின்ற பத்திர பதிவு இனி முடிவடைந்து மகிழ்ச்சியை வழங்கும்.

**மிதுன புதனின் சஞ்சாரம்!**

விரயாதிபதி புதன் விரய ஸ்தானத்தில் மே 25 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். எனவே, எதிர்பாராத விரயங்கள் உருவாகும் வாய்ப்பு உண்டு. 3 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் சகோதர வழியில் உள்ள கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி சேர்க்க வாய்ப்புகள் கைகூடிவரும். மின்சாதன பொருட்கள் ஆபரணங்கள் போன்றவைகளை மாற்றி வாங்க வேண்டுமென்ற நீண்ட நாளைய ஆசை இப்பொழுது நிறைவேறும்.

**மிதுன குருவின் சேர்க்கை!**

மே 28 ஆம் திகதி மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். 6 க்கு அதிபதி பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் உங்களுக்கு செயற்படப்போகிறது. இதன் விளைவாகவும் குருவின் பார்வை பலத்தாலும் நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்துசேரும்.



## கடகம்

குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால் சுகங்களும் சந்தோஷங்களும் கூடும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். கடன்சுமை குறையும். திடீரென ஏற்பட்ட இடமாற்றங்கள் இரத்தாகலாம். மே 30 ஆம் திகதி மிதுனத்தில் சுக்ரனும் இணையப் போகிறார். அசுர குருவும் தேவ குருவும் இணையும் இந்த நேரத்தில் அபரிமிதமான பலன்கள் வந்து சேரும். திட்டமிடாது செய்தகாரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் திங்கட்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். ஆதியந்த பிரபு வழிபாடும் அற்புத பலன்களை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்பரேட் உலகில், தமிழினம் எதிர்கொள்ளும் சவால்கள்!

கடந்த 18 மாதங்களாக ஐரோப்பிய ஒன்றிய ஈரோ வலயத்திலுள்ள 17 நாடுகளின் பொருளாதார நிலைமை வளர்ச்சி குன்றித் தேக்கமடைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் தாக்கம், உலகப் பொருளாதார நிதிக் கட்டமைப்பில் வெடிப்புக்களையும் பின்னடைவையும் உருவாக்குகிறது. நிதியியல் முதலாளித்துவ முறைமையும் கட்டமைப்பு ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் கார்பரேட் முதலாளித்துவமும் இதனால் பெரும் சிக்கலை எதிர்கொள்கின்றன.

ஆனாலும் கார்பரேட் உயர்பீடங்களிற்கும் ஆட்சி அதிகார மையங்களிற்கும் இடையிலான முரண்பாடுகள், வேறொரு பரிமாணத்தை நோக்கி தள்ளப்படுகிறதா என்கிற விவாதங்கள் பரவலாக முன்வைக்கப்படுவதையும் கவனிக்க வேண்டும்.

இந்த கார்பரேட்டுக்களுக்கும் அதிகாரவாசிகளுக்கும் இடையே இணைப்புச் சக்தியாக விளங்கும் முகாமைத்துவ முதலாளித்துவமானது, எவ்வாறான புதிய தோற்றத்தை தனது பிம்பமாக நடைமுறைசார்ந்து கட்டமைத்துக் கொள்ளும் என்கிற கேள்வியே தற்போது பரவலாக எழுப்பப்படுகிறது.

முதலாளித்துவ முறைமையின் படிமுறை வளர்ச்சியில் நிதியியல், முகாமைத்துவம் மற்றும் கார்பரேட் என்பவற்றின் வகிபாகம் முக்கியமானதாகக் கணிப்பிடப்படுகிறது.

உற்பத்தி, உபரி, மூலதன உருவாக்கம், வணிகம், வங்கி என்று நீண்டு செல்லும் முதலாளித்துவ கட்டமைப்பு, ஏதோவொரு நிலையில் கார்பரேட் முதலாளித்துவ முறைமையால் ஆக்கிரமிக்கப்படும் அல்லது அதுவாக மாற்றமடையும் நிலைநோக்கி நகரும்.

முதலாளித்துவ சந்தையானது, பன்னாட்டு கூட்டுத்தாபனங்களின் உயர்நிலை அதிகாரிகளின் ஆளுமைக்குள் ஆட்பட்டு இருக்கிறது. இவை வளர்ச்சியுற்ற நாடுகளின் அரைவாசிக்கு மேற்பட்ட வணிகங்களை கட்டுப்படுத்தும் வல்லமையைக் கொண்டிருக்கின்றன. பங்குச் சந்தையில் பங்குகளை வாங்குவதும் அதனை கூட்டுத்தாபனங்களில் முதலீடு செய்வதுமே இவர்களின் பிரதான தொழில்.

இத்தகைய கார்பரேட்டுக்களின் சந்தை ஆதிக்கமும் வளர்ச்சியும் அரசுகளின் பொருளாதாரக்கொள்கைகளை மாற்றியமைக்கும் அல்லது அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் வேகமாக நகர்வதைக் காண்கிறோம்.

ஏகாதிபத்தியத்தின் உருவாக்கம், வளர்ச்சி, அதன் உச்சகட்டம் எவ்வாறு இயங்கியல் போக்கில் நகரும் என்பது குறித்து ரஷ்யப் புரட்சியின் ஸ்தாபகர் லெனின் அவர்கள் தனது அறிவியல் சார்ந்த சிந்தனையை முன்வைக்கும்போது குறிப்பிட்ட விடயங்களை அவதானித்தால் இப்போதைய கார்பரேட் முதலாளித்துவத்தின் ஏகபோகமே அதன் உச்ச நிலையாக இருக்குமா? என்பது குறித்தான விவாதங்களை உருவாக்குகின்றது.

இக்கட்டமைப்பு உதிர்ந்து விடாமல் இருப்பதற்கு பங்குச் சந்தையில் செயற்கையான வீழ்ச்சியை உருவாக்குவது சீனாவிற்கு நகரும் நேரடி முதலீடுகளை தடுத்து ஏகபோக கார்பரேட் நிறுவனங்கள் மையம் கொண்டுள்ள நாடுகளை நோக்கி நிதி மூலதனத்தை திருப்புவது போன்ற நடவடிக்கைகளை மேற்குலகம் திட்டமிடுவதை புரிந்து கொள்ளலாம்.

இந்த மாற்றங்கள் குறித்து அரசறிவியலாளர்கள் கவலையடைகிறார்கள். ஜனநாயகக் கோட்பாட்டின் இருத்தலுக்கும் தனிமனித- சமூக உறவு நிலைக்கும் கார்பரேட்டின் ஏகபோகம் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்பதுதான் அவர்களின் சமூக அக்கறையின் பாற்பட்ட வெளிப்பாடாக அமைகிறது.

தனிநபர் அல்லது ஒரு குழுவின் வளர்ச்சியானது ஜனநாயக அரசொன்றினை விட பலமானதாக உருவாகி அந்த அரசினையே கட்டுப்படுத்தும் வகையில் மாறுவது, பாசிசத்தை நோக்கி அந்நாட்டினை இட்டுச் செல்லும் என்கிற செய்தியினை பல முதலாளித்துவ சிந்தனையாளர்கள் முன்வைத்துள்ளனர்.

ஆனாலும் 1930களில் முன்வைக்கப்பட்ட எச்சரிக்கைகளைக் கடந்து, ஏகாதிபத்தியத்தின் உச்ச வடிவமாக கார்பரேட் முதலாளித்துவம் இன்று உலகளவில் ஆதிக்கம் செலுத்தும் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது.

இதன் இயக்கவியலைப் புரிந்து கொள்ளாமல் உலக ஒழுங்கின் அசைவியக்கத்தைத் தீர்மானிப்பது பொருத்தமற்றது.

சந்தைகளை விரிவுபடுத்த கார்பரேட்களால் உருவாக்கப்பட்டதே. தாராளவாத பொருளாதார கொள்கைத் திட்டம். இதனை உள்வாங்கிக் கொண்ட நாடுகளுக்கே பன்னாட்டு நிதி நிறுவனங்கள் உதவிகளை வழங்க முன்வந்தன.

இலங்கையில் மேற்குலக அணி சார்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்பாக நாட்டின் வரவு- செலவுத் திட்டத்தினைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு அனைத்துலக நாணய நிதியத்தின் அரூபக்கரங்கள் இன்றும் தொழில்படுவதனை காண்கிறோம்.

59 பில்லியன் டொலர் மொத்த உள்ளூர் உற்பத்தியைக் கொண்ட இலங்கையைப் பொறுத்தவரை பன்னாட்டு கார்பரேட் நிறுவனங்களுக்கு அதிக அக்கறை இல்லை என்று சொல்லலாம். கடல்வழி அமைவிடம், கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த தரிப்பிடம் என்பதைத் தவிர தேயிலைக்கு அப்பால் உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்கு உற்பத்திகள் இங்கு இல்லை.

ஆனாலும் இலங்கையில் மேற்குலக கார்பரேட் மேலாதிக்கத்திற்கு எதிரான மாற்றுச் சக்தி தோற்றம் பெறக்கூடாது என்கிற அவதானமும் இவர்களிடம் காணப்படுகிறது. அத்தோடு தேசிய இன முரண்பாடு பிரிவினைக்கு வழிவகுக்கக்கூடாது என்பது தொடக்கம் மேற்குலக கார்பரேட்டுக்களோடு சந்தை மோதலில் ஈடுபடும் பிரிக்ஸ் அணியும் இங்கு கால் பதிக்கக்கூடாது என்பது வரையான தமது நலன்சார்ந்த எல்லைச் சாத்தியங்களையும் இது ஆய்விற்கு உட்படுத்துகிறது.



இங்கு குறித்துக்கொள்ள வேண்டிய விவகாரம் என்னவென்றால், அமெரிக்கா என்பது ஒபாமாவோ அல்லது ஜோன் ஹெரியோ அல்ல. அது கார்பரேட் உலகத்தால் சூழப்பட்ட ஒரு தேசம். இங்கு இலாபமும் அதன் இருத்தலுமே முக்கியம்.

உழைப்புச் சுரண்டலுக்கான மனித வளத்தின் தேவை கருதியே, ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளை, பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு நிர்மாணித்தன. ஆட்சியாளர்கள் தமது புவிசார் நலனிற்கு முரணாக நிற்கும் போது சலுகைகளை நிறுத்தி, அதே தொழிற்சாலைகளை பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு நகர்த்துவார்கள்.

ஐ.நா.வில் தீர்மானங்களையும் நிறைவேற்றுவார்கள். ஆனால், அவை இலங்கையின் அரசியல் அமைப்பிற்கு முரண்படாதவாறு எழுதப்படும். ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை கால அவகாசமும் வழங்கப்படும்.

அதேவேளை பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளின் பிரதமர்கள் கலந்த கொள்வதாக விடுத்த அறிவித்தல், தனியே அரசியல் மட்டுமல்ல, மாறாக பொருண்மிய நலன் கொண்ட கார்பரேட்களின் அழுத்தங்களும் பின்புலத்தில் இருக்குமென்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

மனித உரிமை மீறல் பற்றிப் பேசுவதோடு மட்டுமல்லாது நல்லாட்சி நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், போர்க் குற்றம் மற்றும் உள்நாட்டு சுயாதீன விசாரணை குறித்து தீர்மானிப்போர் நடாத்துவோர் திட்டமிட்ட வகையில் தமிழ்பேசும் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதையிட்டு பேச மறுக்கின்றனர். பறிக்கப்பட்ட காணிகளை படைத்துறை மட்டுமல்ல பல நாட்டுக்கம்பனிகளும் பங்கு போடத் துடிக்கின்றன.

ஆகவே, மாற்று அரசியல் தெரிவு ஒன்றுக்கான தேவை இங்கு எழுவதை நிராகரிக்க முடியாதுள்ளது. மேற்குலகின் பாதை ஒன்றே இருக்கும் ஒரே வழி என்போரும், இலங்கை- இந்திய ஒப்பந்தமும் அதன் 13 ஆவது திருத்தச் சட்டமும் தவிர்க்க முடியாத தெரிவு என்போரும் இவ்விரு வல்லரசாளர்களின் நலனும் நோக்கமும் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

தப்பித்தவறி இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரணில் அணியினர் ஆட்சியமைத்தால் மேற்குலகின் போக்கில் மாற்றம் ஏற்படுமா? சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற அழுத்தத்தை முன்வைக்குமா?

இவ்வாறான பல கேள்விகள் நம்முன்னே எழுவது உண்மை. அப்போது திரும்பவும் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று ஒரு தரப்பினரும் இது முதல்படி இரண்டாம் படி மெல்ல மெல்ல நகர்வோம் என்று சிலரும் சொல்வார்கள்.

ஆதலால் அடிப்படைக் கோட்பாட்டில் உறுதியாகவிருந்து உரையாடல்களையும் சந்திப்புக்களையும் மேற்கொள்வதே பொருத்தமானதாக இருக்கும்.

அத்தோடு கார்பரேட்களின் மேலாதிக்கத்தைப் புரிந்து தேர்தல் எல்லைகளைக்கடந்த பரந்துபட்ட வகையில் கோட்பாட்டின் தெளிவுள்ள முற்போக்கான ஐக்கிய முன்னணி ஒன்றினை தமிழ்பேசும் மக்கள் அமைப்பதுதான் சரியான பாதை என்று தெரிகிறது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டுக்கு வீண் செலவுகள் செய்யப்படா

## வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

அதிசொகுசு கார்களை இறக்குமதி செய்யும் உத்தேசம் தமக்கு கிடையாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டிற்காக பாரிய பொருட் செலவில் ரோல்ஸ் ரொய்ஸ் மற்றும் பி.எம்.டபிள்யூ கார்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

ஆனால், இக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் எக்காரணங்களுக்காகவும் இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படமாட்டா எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைவாகவே பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்கான சகல செலவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான நாட்டின் அபிவிருத்தியை உலகிற்கு எடுத்துரைத்து, பொருளாதார வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதே அமர்வுகளை நடத்தும் பிரதான நோக்கமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் மூலம் இலங்கை மக்களுக்கு பாரிய நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதே பிரதான நோக்கமாகும் என குறிப்பிட்டுள்ளதோடு கட்சி மற்றும் ஏனைய பேதங்களைக் களைந்து தேசத்தின் நலனுக்காக அனைத்துத் தரப்பினரும் இம்மாநாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

## விஞ்ஞான பிரிவு

# மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தேசியமட்டக.பொ.த.உ/தபரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான உயிரியல், பௌதிகவியல், இராசயனவியல் பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் மே 29 முதல் ஜூன் 5 வரை அவ்வப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான நேரசூசிகை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தவறாது இப்பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. செ.உ.தயகுமார் அறிவித்துள்ளார்.

இவ் வினாத்தாள் தொடர்பான கருத்தரங்கு ஜூன் மாதம் 19 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை மத்திய நிலையங்களில் நடைபெறும். இதன்போது மாணவர்களுக்கான புள்ளித்திட்டங்களும் வழங்கப்படவுள்ளன. (அ)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான அறநெறிப் பாடசாலையின் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் பா.நிமலதாசன் தலைமை தாங்குவதோடு, பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் ச.பகீரதனும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் திருமதி. இ.மாலதியும் சிறப்பு விருந்தினராக கல்வயல் ஜே/305 கிராம அலுவலர் திருமதி சு. உமாஜோதினியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை அறநெறிப் பாடசாலை போஷகர் கலாநிதி கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார். (அ)

# ஆட்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையர்கள் கைது

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கையர்கள் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய மற்றும் பிரான்ஸ் பொலிஸார் கூட்டாக இணைந்து மேற்கொண்ட தேடுதலில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்காசிய வலய நாடுகளைச் சேர்ந்த மக்களை சட்டவிரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தும் நடவடிக்கைகளில் குறித்த கும்பல் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் 11 பேரும் பிரான்ஸில் 7 பேரும் மொத்தமாக 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்களிடமிருந்து பணம், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. (அ-2)

# நவக்கிரக ஹோமம்

(சிவநகர்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் குருப்பெயர்ச்சி நவக்கிரக ஹோம அபிஷேக பூஜை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் இடப ராசியில் இருந்து ஆட்சி செய்த குருபகவான் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய் அன்று இரவு 9.34 மணிக்கு மிதுன இராசிக்குள் பிரவேசிக்கவுள்ளார். (அ-254)

# விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(மல்லாவி)

தேசிய இளைஞர் மன்றத்தினால் முல்லைத்தீவு மாவட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் இளைஞர், யுவதிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முல்லை. மாவட்ட சம்மேளன உப செயலாளர் கே.சிந்துஜன் அறிவித்துள்ளார்.

மாவட்ட, பிரதேச சம்மேளனங்களின் உறுப்பினர்களும், பிரதேச மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களும் மற்றும் மாவட்ட மட்டத்திலான குழு நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களும் இப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும் என அறிவித்துள்ளார். (அ-3-15)




- ❖1738- மெதடிஸ்த இயக்கம் ஜோன் உவெஸ்லியால் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1798-அயர்லாந்தில் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கெதிராக ஐரியர்களின் எழுச்சி ஆரம்பமாகியது.
- ❖1844-முதலாவது மின்னியல் தந்திச் செய்தி சாமுவேல் மோர்ஸ் என்பவரால் வோஷிங்டன் டிசியல் இருந்து மேரிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட செய்தி :(What hath God wrought)
- ❖1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் வேர்ஜீனியாவின் அலெக்சாண்டிரியா நகரைக் கைப்பற்றின.
- ❖1883-நியூயோர்க்கில் புரூக்கிளின் பாலம் திறந்து விடப்பட்டது.
- ❖1901-தெற்கு வேல்சில் இடம்பெற்ற விபத்தில் 78 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- ❖1941-இரண்டாம் உலகப் போர்: வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் பிஸ்மார்க் என்ற ஜேர்மன் போர்க்கப்பல் ஹூட் என்ற பிரித்தானியக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- ❖1956-சுவிட்சர்லாந்தில்முதலாவது யூரோவிஷன் பாடல்போட்டி இடம்பெறறது.
- ❖1962-அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் கார்ப்பெண்டர் அவ்ரோரா 7 விண்ணூர்தியில் மூன்று முறை பூமியைச் சுற்றி வந்தார்.
- ❖1991-எதியோப்பியாவில் இருந்து யூதர்களை இஸ்ரேலுக்குக் கொண்டு வரும் சொலமன் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது.
- ❖1993-எதியோப்பியாவிடம் இருந்து எரித்திரியா விடுதலை அடைந்தது.
- ❖2000-22 வருட முற்றுகைக்குப் பின்னர் இஸ்ரேலியப் படையினர் லெபனானில் இருந்து வெளியேறினர்.
- ❖2000- இலங்கையில் நோர்வே தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.
- ❖2001 எவரெஸ்ட் சிகரத்தை 15 வயது ஷெர்ப்பா டெம்பா ஷேரி எட்டினார். அச்சிகரத்தின் உச்சியை எட்டிய வயதில் குறைந்தவர் இவரே ஆவார்.
- ❖2002-ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் மொஸ்கோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- ❖2006-விக்கிமேப்பியா ஆரம்பிக்கப்பட்டது.


*பிறப்புகள்*

- ❖1686-கப்ரியேல் ஃபரன்ஹைட் ஜேர்மனிய இயற்பியலாளர் (இ.1736)
- ❖1819-விக்டோரியா மகாராணி, ஐக்கிய அமெரிக்காவின் அரசி (இ.1901)
- ❖1905-மிகயில் ஷோலகவ, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ.1984)
- ❖*1921-சு. வேலுப்பிள்ளை, ஈழத்து நாடகாசிரியர், எழுத்தாளர்*
- ❖1979-ட்ரேசி மெக்ரேடி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

*இறப்பு*

- ❖1543-நிக்கோலஸ் கோப்பர்னிக்கஸ, வானியலாளர் (பி. 1473)

### *சு.வேலுப்பிள்ளை*



சு.வே. என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை 1921 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். இலங்கையின் சிறப்புமிக்க உருவகக் கதை எழுத்தாளரும் நாடகாசிரியரும் தமிழ்ப் பண்டிதரும் ஆவார். வேலுப்பிள்ளை யாழ்ப்பாண மாவட்டம் நாவற்குழியில் சுப்பிரமணியம் தையல் நாயகி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியராக 1946 முதல் 1981 வரை இலங்கையின் டிக்கோயா, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணி புரிந்தார்.

சு.வேயின் முதல் சிறுகதை கிடைக்காத பலன் 1943 இல் ஈழகேசரியில் வெளியானது. சு.வேயின் சிறுகதைகள் மண்வாசனை, பாற்காவடி ஆகிய சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்தன.

1965 இல் இலங்கை கலைக்கழகம் நடத்திய நாடகப்போட்டியில் இவரது வஞ்சி என்ற ஓரங்க நாடகம் முதல் பரிசு பெற்றது. அடுத்த ஆண்டும் இவரது எழிலரசி என்ற முழுநீள நாடகம் முதல் பரிசைப் பெற்றது.

1960 இல் இலங்கை வானொலி நாடகப்போட்டியில் இவரது மண்வாசனைக்கு முதல் பரிசு கிடைத்தது. 1968 இல் ஒருமை நெறித்தெய்வம் என்ற நாடகம் பரிசு பெற்றது. சு.வே. வானொலி கிராம சேவைக்கு பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதினார்.

செங்கை ஆழியான் தொகுத்து வெளியிட்ட ஈழகேசரி சிறுகதைகள், மறுமலர்ச்சி சிறுகதைகள் ஆகிய தொகுப்புகளில் இவருடைய சிறுகதைகள் சில இடம்பெற்றுள்ளன. இவர் 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி தனது 86 வயதில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வாகனங்களின் விபரம்

(முல்லைத்தீவு)

போர் நடவடிக்கைகளின் போது கைவிடப்பட்ட வாகனங்களின் விபரங்கள் எமது மாவட்ட செயலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, பின்வரும் இலக்கங்களையுடைய வாகனங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய மூல ஆவணங்களுடன் (பொலிஸ் அறிக்கை) உட்பட மாவட்ட செயலகத்திற்கு சமூகம் தருமாறு முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கங்கள் இல்லாத வாகனங்களுக்கு இயந்திர இலக்கமும் இயந்திர இலக்கம், வாகன இலக்கம் இல்லாத வாகனங்களுக்கு அடிச்சட்ட இலக்கமும் பிரசுரமாக்கப்படுகின்றது. கைவிடப்பட்ட வாகனங்களின் விபரம் வருமாறு,

வாகன இலக்கம்

JU -7574, MH- 8324, UA-87 25, JK-9018, MD-4301, 8 SRI -5363, 166-6804, UL-3017, MB-1302, HH-1652, GA-1070, JB-8700, HD-5204, MS-6176, UB-0403, MB-9230

இயந்திர இலக்கம்

05E08M36182, SGVMJ 74373, AWEN 0156, 07122E07811, 04 Co 81145887, 06A192968, AWEN 0055, AWEN 0054, AWEN 0060, 05 E08M28933, 150FMGPJ 0953 42, 05F03232515

அடிச்சட்ட இலக்கம்

MBLHX11EE79M00524 (அ-267)

## இலங்கை பாராளுமன்றில் தாய்லாந்து பிரதமர்



(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ரா இலங்கைப் பாராளுமன்றில் உரையாற்றவுள்ளார்.

இது குறித்த அறிவிப்பை பிரதிசபாநாயகர் சந்திம வீரக்கொடி நேற்று முன்தினம் பாராளுமன்றில் வெளியிட்டார். அதன்படி, எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு தாய்லாந்து பிரதமர் இலங்கைப் பாராளுமன்றில் உரையாற்றவுள்ளதாக பிரதி சபாநாயகர் தெரிவித்தார். (அ-2)

# வடக்கு தேர்தல் நடைபெறாவிடின் நாடு இரண்டாக பிளவுபட நேரும்

## சோஷலிசக்கட்சியின் தலைவர்

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் இலங்கை ஒரேநாடாக இருக்கும். அதே நேரம், தேர்தல் நடைபெறாதுவிடின் நாடு இரண்டாக பிளவுபட வழி ஏற்படும் என சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை கட்டியெழுப்பும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள அனைத்து மாகாணங்களிலும் எந்தவொரு பிரச்சினையும் இல்லாது தேர்தல் நடைபெற்றுள்ளது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. தேர்தல் நடத்தப்படாது அது போயின் வடக்கில் வாழும் சிறு பான்மை தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதாகவே கருதப் படப்படும்

இந்நிலையில் சிங்கள மக்களின் மனங்களைத் திசைதிருப்பி இத் தேர்தலை குழப்ப அரசாங்கம் வழி தேடுகின்றது. இந்த வகையிலேயே அரசாங்கம் தன்னுடன் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளை தூண்டி விட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# தமிழர்களின் போராட்டம் முடிவுக்கு வரவில்லை

## காஷ்மீர் வி.மு. தலைவர் யாசின்மாலிக்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களின் ஈழப் போராட்டம் நிறைவு பெற்றுவிட்டதாக நான் நினைக்கவில்லை. ஈழமும் காஷ்மீரும் ஒரு மக்கள் சமூகத்தின் தேசிய இனக் கருத்தியல் . அதை ஒருபோதும் அழிக்க முடியாது என ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் இயக்கத்தின் நான்காம் ஆண்டு விழாவுக்காக அண்மையில் தமிழகம் வந்தவரிடம் செய்தியாளர்களினால் ஈழப்போராட்டம் தோல்வியடைந்துவிட்டதா? ஈழப் போராட்டத்தின் முடிவை எப்படிப் பார்க்கிறீர்கள் என்ற வினா எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துரைக்கையில்,

இலங்கையில் இனப்படுகொலை ஒன்றின் மூலமாக இலங்கைத் தமிழர்களின் இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முடி வுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தமிழர்களின் போராட்டம் முடிந்து விட்டதாக நான் நினைக்கவில்லை.

ஈழமும் காஷ்மீரும் ஒரு மக்கள் சமூகத்தின் தேசிய இனக் கருத்தியல். அதை ஒருபோதும் அழிக்க முடியாது. மத சார்பற்ற வகையில் மக்கள் சமூகங்கள் ஒன்றிணைந்து அஹிம்சை வழியில் தங்களின் கோரிக்கைக்காக போராட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# யாப்பு திருத்தங்களை தெரிவுக்குழு மட்டுமே பிரேரிக்க முடியும்-மஹிந்த

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு மட்டுமே இலங்கையில் அரசியலமைப்புக்கான திருத்தங்களைப் பிரேரிக்க முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்திக் கூறியுள்ளதாக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு வடமாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தும், அல்லது மாகாணங்களுக்குள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இல்லாதொழிக்கும் எண்ணங்கள் இல்லை எனவும் அவர் கூறினார்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் உள்ள பங்காளிக்கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை எதிர்ப்புக் காட்டுவது பற்றி கேட்கப்பட்டபோது அவர்களுக்கு தமது தனிப்பட்ட கருத்தை எமக்கு வெளிப்படுத்தும் உரிமை உள்ளது எனவும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலில் பங்குபற்ற ஆயத்தமாகி வருவது மகிழ்ச்சியை தருகின்றது. இதன் மூலம் அவர்கள் ஐக்கிய இலங்கை என்ற எண்ணக்கருவை ஏற்றுள்ளனர் எனவும் அவர் கூறினார். (அ-2)

## வவுனியாவில் முழு நிலா கருத்தாடல் நிகழ்வு இன்று

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 157 ஆவது முழு நிலா கருத்தாடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் கலாசார மண்டபத்தில் கலாநிதி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தவறு, விழித்திடு எனும் இரு குறும் படக்காட்சிகளும் அவை பற்றிய விமர்சனங்களும் நடைபெறவுள்ளன. (அ-2-266)

# வாக்குப் பலத்தினூடாக அரசைக் கவிழ்க்கமுடியும்

## ரணில் தெரிவிப்பு

இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சிகள் செய்யத்தேவையில்லை எனவும் வாக்குப் பலத்தின் ஊடாக அரசாங்கத்தைக் கவிழ்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


வெளிநாட்டுப்பெண் தூதுவர் ஒருவரைச் சந்தித்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானதென அவர் சுட்டிக்காட்டினார்.

ஜேர்மனியின் உதவியைப் பெற்றுவரும் பெட்ரிக் நியூமன் பவுன்டேசன் என்ற அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடத்தும் கருத்தரங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சூழ்ச்சி என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமையால் அதில் கலந்து கொண்ட உறுப்பினர் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கு இணைப்பாளர் சாகரிகா தெல்கொடவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளதாகவும் எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்நிலைக்கு ஆளாகலாம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இது பாராளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதத்தை மீறும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தான் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயார் எனவும் அதற்குக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் அவசியம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (அ-2)



கலைவாணி கல்விநிலையத்தின் 31 ஆவது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் கல்வி நிலைய வளாகத்தில் இடம்பெற்றன. இவ்விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி ஆறுதிருமுருகன் மங்கல விளக்கேற்றுவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சித்தங்கேணி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருகோடியே பத்து இலட்சம் பேருக்கு அமெ.வில் குடியுரிமை

அமெரிக்காவில் 2 இலட்சத்து 60 ஆயிரம் இந்தியர்கள் உள்ளிட்ட ஒரு கோடியே 10 இலட்சம் பேருக்கு அமெரிக்க குடியுரிமை கிடைக்கவுள்ளது. இதற்கான முக்கிய மசோதாவுக்கு செனட் சபை குழு ஒப்புதல் அளித்தது.

**ஆவணங்களின்றி வசிப்பவர்கள்**

அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இன்றி ஒரு கோடியே 10 இலட்சம் வெளிநாட்டவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் இந்தியர்கள்.

இவர்களுக்கு குடியுரிமை வழங்க வகை செய்து முழுமையான குடியுரிமைச் சீர்திருத்தம், எல்லைப் பாதுகாப்பு, பொருளாதார வாய்ப்பு மற்றும் குடியுரிமை போன்றவற்றை உள்ளடக்கி நவீனமய சட்ட மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

**செனட் சபை ஒப்புதல்**

இந்த மசோதா அமெரிக்க செனட் சபையின் நீதித்துறைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த மசோதாவை நீதித்துறை உறுப்பினர்கள் பரிசீலித்து விவாதித்தனர்.

முடிவில் மசோதாவுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன. எனவே, 8 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா நீதித்துறைக்குழுவின் ஒப்புதலை பெற்றுள்ளது.

**எச் 1 பி விசா அதிகரிப்பு**

அமெரிக்காவில் தங்கிப் பணிபுரிவோருக்கு வழங்கப்படக் கூடிய எச்1பிவிசாவை அதிகரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்த பின்னரே இந்த மசோதாவுக்கு செனட் சபையின் நீதித்துறைக்கு குழு ஒப்புதல் வழங்கியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

அது மட்டுமல்ல இந்த மசோதாவில் 300 திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.


**வழி பிறக்கிறது**

அடுத்தகட்டமாக இந்த மசோதா செனட்சபையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் 100 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபையில் 60 உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்று மசோதா நிறைவேற வேண்டும். பின்னர் ஜனாதிபதி ஒபாமாவின் கையெழுத்துடன் இந்த மசோதா சட்டமாகி விடும். இதனால் 2 இலட்சத்து 60 ஆயிரம் இந்தியர்கள் உட்பட ஒரு கோடியே 10 இலட்சம் வெளிநாட்டினர் அமெரிக்கக் குடியுரிமை பெற வழி பிறக்கும்

**ஒபாமா வேண்டுகோள்**

இந்த மசோதாவை செனட் சபையில் விரைவாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா கேட்டுக்கொண்டுள்ளார். இதுபற்றி ஒபாமா கூறுகையில், இந்த மசோதாவில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் மேலும் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும். இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் நானும் செனட் சபையின் நீதித்துறைக்குழு உறுப்பினர்கள் எல்லோரும் நினைத்தவை எதுவும் நடந்துவிடவில்லை. அதே நேரத்தில் இதன் முடிவு அமெரிக்க மக்களுக்கு நலன் பயப்பதாக அமையும் என்றார். (அ-2)

# இந்திய-சீன அமைச்சர்கள் ஜெனீவாவில் சந்திப்பு



(புதுடில்லி)

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உலக சுகாதார சபைக் கூட்டம் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் கலந்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திற்குப்பின் அவர் சீனாவின் சுகாதாரத்துறை அமைச்சர் லி பின் ஐ சந்தித்தார்.

அப்போது சுகாதாரத்துறையில் இரு நாடுகளும் இணை ந்து செயற்படுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சுகாதாரத்துறையில் சவால்களாக உள்ள தாய், சேய்நலம், தொற்று நோய்கள், முதியோர்நலம், புதிதாக தோன்றும் நோய் போன்றவற்றை எதிர்கொள்வதில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து குலாம் நபி ஆசாத் கூறுகையில், இரண்டு நாடுகளும் ஒரே சமயத்தில் சுதந்திரமடைந்தவை. அதிக மக்கள் தொகையை கொண்டவை. இதனால் ஒருவரிடமி ருந்து ஒருவர் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது என்றார். இந்த தகவலை டில்லியில் உள்ள அதிகாரிகள் தெரிவித் தனர். (அ-2)


## கண்ணீர்ப் பூக்கள்



எமது பாடசாலையின் ஆசிரியர்

**திருமதி கோமளா சரவணன்** அவர்களது தந்தை

**அமரர் கந்தையா முத்துலிங்கம்**

அவரின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

(சி/3403)

## சாவகச்சேரி பிரதேச சபை
### கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல் - 2013

சாவகச்சேரி பிரதேசசபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் C8 பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரத்தை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்வி இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தலைவர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப் பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்வி பரிசீலிக்கப்படும்போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. கேள்வி படிவம் வழங்கப்படும் ஆரம்பத் திகதி 27.05.2013 காலை 10.00 மணிமுதல் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி :- 10.06.2013 பி.ப 2.00 மணிவரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- 11.06.2013 பி.ப 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- அன்றைய தினம் (11.06.2013 ) பி.ப 2.00 மணிக்கு கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும்.

6. மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT + NBT 12%+2% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் சந்தை மின் இணைப்பு செய்தல் | 3000.00 | 750.00 | 105.00 |

**சிற்றம்பலம் துரைராஜா**
தவிசாளர்
சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம்

(சி-3406)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வான் ஒன்றை வாடகைக்கு அழைப்பின் பேரில் வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோக பூர்வ தேவைக்காகப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கு வான் (Van) ஒன்றின் சேவை அந்த வாகனத்துக்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன் கிலோ மீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக் கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாகனமானது பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும்.

1. வாகனம் 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. இருபொறிமுறைக் குளிரூட்டி
(Dual Air Conditioning)
3. போதிய இடவசதியுடனான குறைந்த பட்சம் 10 பேருக்கான இருக்கை ஒழுங்கமைப்பு
(Comfortable Seating Arrangements with Adequate Space for Legs)
4. மாற்றியமைக்கக் கூடிய இருக்கைகள்
(Adjustable Seats)

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரப் படிவங்களை 07.06.2013 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு தபாலில் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். கடித உறையின் இடது புற மேல் மூலையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்குதல் என்று குறிப்பிடல் வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விபரங்களை நிர்வாகக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(சி/3408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் உயிரிழப்புக்கு காரணமானவரை வரவேற்கலாமா?

## நாம் தமிழர் கட்சி தலைவர் சீமானின் கேள்விக் கணைகள்



இலங்கையில் தமிழ்மக்கள் உயிரிழக்கக் காரணமானவரை அழைத்து இரத்தினக் கம்பள வரவேற்பு கொடுப்பது தேசத்திற்குப் பெருமை தரக்கூடியதா? என நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாம் தமிழர் கட்சி கூட்டத்துக்கு யாசின் மாலிக்கை அழைத்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சீமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

கடலூர் நகரில் நாம் தமிழர் கட்சி நடத்திய உள் அரங்குக் கூட்டத்தில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக் கலந்து கொண்டதற்கு காங்கிரஸ் பாரதிய ஜனதா கட்சிகள் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

இலங்கையில் ஒன்றே முக்கால் இலட்சம் தமிழ்மக்கள் உயிரிழக்கக் காரணமான மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து இரத்தினக் கம்பள வரவேற்பு கொடுக்கிறீர்களே? அது இந்தத் தேசத்திற்கு பெருமை தரக்கூடிய விடயமாகுமா?

கடந்த 35 ஆண்டுகளாக கச்ச தீவு கடற் பகுதியில் 544 மீனவர்களைக் கொன்று குவித்துள்ள இலங்கை அரசை உபசாரம் செய்த செயல் தமிழர்களுக்கு வெறுப்பேற்றாதா? பிரிவினைக்கு வித்திடாதா? இலங்கையில் எம் தமிழினம் எப்படித் திட்டமிட்டு இன்றளவும் அழிக்கப்பட்டு வருகிறதோ அதே போல் காஷ்மீரிலும் நாங்கள் நசுக்கப்படுகிறோம் என்று யாசின் மாலிக் கூறினாரே அதற்கு உங்கள் பதில் என்ன?

இந்திய படைகள் தங்கள் மண்ணில் இருந்து வெளியேற வேண்டும் என்று கூறி காஷ்மீர் மக்கள் நடத்திய பெரும் போராட்டம் இந்த நாட்டிற்கே தெரியும்.

அப்படியானால் அந்த மக்கள் இந்திய அரசுக்கு எதிராகப்போராடி வருவது ஏன்? அம்மாநிலத்தில் ஆயுத படைகள் சிறப்பு அதிகார சட்டம் என்னும் காட்டு மிராண்டித்தனமான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இந்திய இராணுவம் எந்த வீட்டில் வேண்டுமானாலும் நுழைந்து யாரை வேண்டுமானாலும் விசாரணைக்குத் தூக்கிச் செல்லலாம் என்கின்ற நிலையை இன்று வரை அனுமதிக்கிறீர்களே ஏன்?

இந்திய இராணுவத்தால் அம் மாநிலத்தில் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டவர்கள் பத்தாயிரம் பேருக்கு மேல் இன்றுவரை என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்று ஐ.நா மனிதவுரிமை அமைப்பு கூறியதே அதற்கு இந்த தேச பக்தர்களின் பதில் என்ன? என்று கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)

## யாழில் வெசாக்

யாழ். படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் வெசாக் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இரவு 7 மணி தொடக்கம் யாழ் நகரப்பகுதியில் நடைபெறவுள்ளதாக பாதுகாப்புப் படையின் ஊடகத் தொடர்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## சங்காபிஷேகம்


(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மஹா கணபதி பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தையொட்டி சங்காபிஷேக நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. (அ)

## விசாகப் பொங்கல் நிகழ்வு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் நிகழ்வும் அதனைத் தொடந்து லலிதா சகஸ்ர நாம அர்ச்சனையும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(அ)



யா/நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது. இவ் விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலைகள் மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன், அவரது பாரியார் ஆகியோர் இணைந்து மாணவி ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## நூற்றாண்டு விழாவை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத் தமிழ் சங்கமும் மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் எதிர்வரும் ஜூன்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

மாவட்ட ரீதியாக நடத்தப்படும் இப்போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், வவுனியா மாவட்டத்தில் வவு/ நம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் மன்னார் மாவட்டத்தில் மன்/ புனித சேவியர் ஆண்கள் கல்லூரி ஆகிய வற்றில் நடத்தப்படவுள்ளன. (அ-5)

## பதிவுகளை மேற்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிங்களம் மற்றும் தமிழ் சான்றிதழ் கற்கை நெறிக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் தவறாது சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# 19 ஆம் திருத்த சட்டத்திற்கு முஸ்லிம் மக்கள் ஆதரவளிக்கக் கூடாது

## முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முஸ்லிம் கட்சிகள் எந்த வகையிலும் ஆதரவு அளிக்கக் கூடாது என முஸ்லிம் மக்கள் கட்சியின் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான சட்டம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் யுத்தம் நிலவிய போது மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டதை எமது கட்சி ஆதரிக்க வில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தின் படி 1989 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பொலிஸாரில் நாற்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பொலிஸார் தமிழ் பொலிஸாரால் பிரித்தெடுக்கப்பட்டு கொல்லப்பட்டதை ஒரு [illegible]

இதன் கா[illegible] எமது கட்சியினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்த எமது கட்சியின் அரசியல் தீர்வுக்கான பத்து அம்ச திட்டத்தில் மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தும் படி கோரியிருந்தோம்.

ஆனால், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள இப்போதுள்ள நிலை யுத்தமற்ற நிலையாகும். அதேவேளை தமிழ், முஸ்லிம் முறுகல் நிலை ஓரளவு நீங்கியுள்ளதோடு நாட்டின் முழு அதிகாரங்களும் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஆனால், இனங்களுக்கிடையில் குறிப்பாக சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையில் பாரிய முறுகலும் சந்தேகங்களும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின் ஒரு காலத்திலும் இல்லாத அளவு தற்போது காணமுடிகின்றது.

இதனால் புலிகள் காலத்தில் இடம்பெறாத அளவுக்கு தற்போது தமிழ் பேசும் மக்களின் காணிகள் [illegible]ரமிக்கப்படுவதை அன்றாடம் [illegible] முடிகின்றது.

அதேபோல் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் என்பன தமிழ் பேசும் மக்களைக் கொண்டவை என்பதால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதனூடாகவே இன ஒற்றுமையையும் அதிகாரி தரப்பு பற்றிய மக்களின் சந்தேகங்களையும் அச்சத்தையும் நீக்க முடியும்.

இந்தவகையில் 19 ஆம் திருத்தச் சட்டத்துக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகள் ஆதரவளிக்கக்கூடாது என்பது எமது கட்சியின் கோரிக்கையாகும். ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசும் அதாவுல்லாவும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவளித்து விட்டு 18 ஆவது திருத்தத்துக்கும் ஆதரவளித்தமை தாம் செய்த மிகப் பெரிய தவறு என புலம்பித்திரிந்தனர்.

எனவே, 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் ஆதரவளித்து விட்டு புலம்பலை தொடர்வதை தவிர்த்து எந்த வகையிலும் இதற்கு ஆதரவளிக்க வேண்டாம் என முஸ்லிம் கட்சிகளை முஸ்லிம் மக்கள் கட்சி கேட்டுக் கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.

~ மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச அழுத்தத்தின் வெளிப்பாடே வடக்கு மாகாண சபைத் தேர்தல்

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்குமா? என்ற சந்தேகம் தேவையற்றதாகி விட்டது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஜனாதிபதி விலக முடியாதென்பது உறுதியாகியுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம், முதல் தடவையில் வெற்றி யடைந்த போது இலங்கை அரசு அதனை அலட்சியம் செய்தது.

மீண்டும் இரண்டாவது தடவையாகவும் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தாதது போல் இலங்கை அரசு காட்டிக் கொண்டாலும், தீர்மானம் தொடர்பில் உதாசீனப் போக்கைக் கடைப்பிடிப்பது ஆபத்தானது என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் தலைமையிலானஅரசு உணர்ந்துள்ளதென்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

மூன்றாவது தடவையாகவும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவுக்குக் கொண்டு செல்லப்படும் அளவில்; அரசு நடந்து கொள்ளக் கூடாதென்பது அரசுக்கு ஆலோசனை வழங்கும் ராஜதந்திரிகளின் எச்சரிக்கை.

ஆக, ஜெனிவாத் தீர்மானமும் இந்தியாவின் அறிவுரைகளும் சேர்ந்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தப் போகின்றது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்திவிட்டால், சர்வதேசத்தின் பலமான அழுத்தங்களில் இருந்து ஓரளவுக்கு விடுதலை பெற முடியும் என்று அரசு நம்புகின்றது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது தமிழர்களுக்குத் தனி நாடு வழங்குவதற்குச் சமமானது என இனவாதக்கட்சிகள் சீற்றம் கொண்டாலும் அதுபற்றி அரசு அலட்டிக் கொள்ளாது என்பது திண்ணம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் விமல் வீரவன்ச, வடக்கு மாகாண சபைத் தேர்தலைக் கடுமையாக எதிர்க்கிறார்.

இந்த எதிர்ப்புப்பற்றி ஜனாதிபதிக்கு முன் கூட்டித் தெரியாததல்ல.

அமைச்சர் விமல் வீரவன்சவின் இந்த எதிர்ப்புக்களைச் சுட்டிக்காட்டி காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாதென ஜனாதிபதி இந்தியாவுக்கும் இதர நாடுகளுக்கும் கூறப் போகிறார்.

அதேநேரம் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீக்க அனுமதியோம் என அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸவிதாரண போன்றவர்களின் அதட்டல், பொதுபல சேனாவின் வெருட்டல்களுக்கான எதிர்ப்பு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆக, அவர்களையும் இவர்களையும் உசுப்பேற்றி வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதும் அதற்கான அதிகாரங்களை வழங்க மறுப்பதுமான திட்டத்தை அரங்கேற்றுவதற்கான ஒத்திகைகளே இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

## காய்ச்சல் ஏற்படின் மலேரியாவுக்கான இரத்த பரிசோதனை செய்யுங்கள்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக ஆரம்பமான மலேரியா நோயிலி ருந்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடைபவனி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கைச் சென்றடைந்த பின்பு அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் மலேரியா நோயை முற்றாக இல்லாது ஒழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு தற்போது யாழ். மாவட்டத்தில் மலேரியா நோயைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வெற்றியும் கண்டுள்ளோம்.

மலேரியா தொற்றுள்ள நாடுகளுக்குச் செல்வதற்கு முன்பாகவும் அவ்வாறான நாடுகளுக்குச் சென்று நாடு திரும்பிய பின்பும் உடனடியாக மலேரியா தடுப்பு மாத்திரைகளை உட்கொள்வதோடு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மலேரியா நோய்த்தொற்றுள்ளதா என இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-6)

## மன்னார் மாவட்டத்தில் முழுநிலா கலைவிழா

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தின் கீழுள்ள கல்வித் திணைக்களங்களில் நடத்தப்படும் முழுநிலா கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த 13 மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் அத்தோடு கல்விச் சமூகத்தைச் சேர்ந்த கொழும்புப் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியற் பீடாதிபதி சோ.சந்திரசேகரன் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் (தமிழ்) கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோருக்கு நினைவுப் பரிசில்கள வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கலை நிகழ்வுகளில் சிறப்பு கலை நிகழ்வாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் பங்கேற்கும் மீண்டும் மீண்டும் சமாதானம் என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வும் இடம் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-3-15)

## தரம் 5 மாணவர்களுக்கு மாகாண மட்டப் பரீட்சை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய ஆரம்பக் கல்வி தரம் 5 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சை இலக்கம்-2 வினாத்தாள்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாணவர்களுக்குரிய வினாத்தாள்களைத் தங்களுக்குரிய கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த இப்பரீட்சை எதிர் வரும் ஜூன் முதலாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-3-15)

## நீண்டகாலத்திற்குப்பின் குளிர்த்திப் பொங்கல்

(பொற்பதி)

பச்சிலைப்பள்ளி, இயக்கச்சி ,முகாவில் திரியாய் பர்வதபத்தினி அம்பாள் தேவஸ்தான வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பதியின் வடகீழ்த் திசையில் ஆற்றங்கரையோரம் வீற்றிருக்கும் அம்பாளின் திருக்குளிர்த்தி பொங்கல் இவ்வாண்டு எழில்மிகு புதிய தோற்றம் கொண்ட ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நீண்டகாலத்தின் பின் இவ்வாண்டு ஆலய மரபுக்கமைய பண்டமரவடியில் இருந்து பண்டம் எடுத்துவரப்பட்டு அன்று மாலை ஆலயத்தில் திருக்குளிர்த்திப் பொங்கல் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து வழிவெட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பக்தர்களின் போக்குவரத்து நலனை கருத்திற்கெண்டு தனியார் சிற்றூர்தி சேவையும் இடம்பெறவுள்ளதாகவும் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3-64)

## சமூக சேவைகள் அமைச்சின் உதவிகள்

(கரணவாய்)

சமூக சேவைகள் அமைச்சு வீடமைப்பதற்கு உதவியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம்ரூபாவை உடுப்பிட்டியைச் சேர்ந்த தம்புமணி ஜெயகுலேந்திரன் என்பவருக்கு ஒதுக்கியுள்ளது.

அத்துடன் வடக்குமாகாண சமூக சேவை திணைக்களத்தினால் ஆடு வளர்ப்பதற்கு கரணவாய் மத்தி பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணப்பிள்ளை இராஜேஸ்வரி என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த இருநபர்களையும் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (அ-3-60)



## வெள்ளி நற்சிந்தனை
## செவ்வியல் தமிழில் சீர்மியம்

சிவனுடைய திருக்கோலத்தைப் பல அடியார்கள் பாடியுள்ளனர். மூன்று வயது சம்பந்தர் முதலாக 81 வயது அப்பர் வரை பாடப்பட்ட தேவாரங்கள் பல்லாயிரம். அவை முழுவதும் இன்று கிடைக்காவிட்டாலும் கிடைத்த பாடல்களின் தொகுப்பாக ஏழு திருமுறைகள் உள்ளன. மணிவாசகர் காலத்தால் பிற்பட்டவர். அவர் பாடிய பாடல்கள் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் திரு உத்தரகோச மங்கை என்னுந் தலத்திலே பாடப்பட்ட நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்களைக் கொண்டது. அப்பாடல்களில் சிவனுடைய திருக்கோலங்களை அழகிய சொற் சித்திரங்களாகப் பதிவு செய்துவைத்துள்ளார்.

இறைவனை அடையவேண்டும் என்ற பெருவிருப்போடு பாடும்போது அவருடைய உள்ளத்திரையிலே காட்சி தந்த திருக்கோலத்தையே எல்லோரும் காணவைக்கிறார். சிறப்பாக இறைவனுடைய திருக்கோலத்தைத் திருமுடியின் கோலமாகக் காட்டுகிறார். பெரிய கங்கையாறு பொங்கி வந்த போது தங்கிய நீரை சடையிலே உள்ள மடுவினுள் அடக்கிய கோலம். அந்த மடுவினுள் அவர் திருச்சடையிலே உள்ளடக்கிய முதலாம் பிறை சிறிய தோணி போலக் காட்சிதருகிறது. முன்னொரு காலத்தில் பகீரதன் தவத்தால் விண்ணிலிருந்து பலகிளைகளாக விரைவாகப் பொங்கி வருகின்ற கங்கையாற்றை அவனுடைய வேண்டுகோளுக்கிரங்கி இறைவன் சடையிலே அவ்வெள்ளத்தை ஏற்றபோது அது ஒரு மடுவாகீத் தோன்றியது. மடு என்பது இயற்கையாக நீர் தங்கவைக்கப்படும் இடமாகும்.

இறைவன் திருமுடியிலே சூடப் பெற்றிருப்பது ஒரு கலைப் பிறையென மணிவாசகர் குறிப்பிட்டுள்ளர். பிறிதொரு பாடலில் ஒற்றைக் கலைத் தலையாய் இதனைப் பதிவு செய்துள்ளார். இத்தகைய பிறைசூடிய இறைவனை வானக்கொழுமணியே! என மணிவாசகர் அழைக்கிறார். கங்கையின் வெள்ளிய நீர், வெண்மையான ஒற்றைப் பிறை எல்லாவற்றையும் கொண்ட சிறந்ததொரு மாணிக்கமாக இறைவன் தோன்றுகிறான்.

தன்னுடைய துன்பநிலையை உணர்த்துவதற்கு ஓர் உவமையை மணிவாசகர் பயன்படுத்தியுள்ளார்.

பெரு நீரறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப்பிரிந்த வெரு நீர்மையேன் பெரு நீர்ப்பரப்பிலே வாழ்ந்த சிறிய மீன்கள் அந்த நீர் திடீரென வற்றிவிட்டால் வாடிவிடும். ஓடித்திரிய முடியாமல் துவண்டு விடும். அது போல் எனக்குப் பற்றுக்கோடாக இருந்த நின்னைப் பிரிந்தமையால் மிகவும் வருந்துகிறேன். பற்றுக்கோடின்றி அஞ்சுகின்றேன் என்கிறார். என்னை நீ கைவிட்டு விடாதே என்ற அவருடைய துன்பக் குரல் மூலம் ஒரு செய்தியை எமக்குத் தருகிறார்.

நாம் அனுபவித்த துன்பத்தை நினைவூட்டுகிறார். அத்தோடு இனி வரப்போகும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும் வழிகாட்டுகிறார். இறைவனிடம் நாம் துன்பத்திலிருந்து மீட்கும்படி விண்ணப்பிக்கலாம். பகீரதன் வேண்டுகோளுக்கு உதவியது போல இறைவன் எல்லோருக்கும் துணையாக இருப்பான். மனித வாழ்க்கையில்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அச்சத்தோடு பலர் துன்பத்தை எதிர் கொள்ளும் நிலை இன்றுவரை நிலவுகிறது. அவர்கள் இறையருள் பற்றிய றிய வேண்டும். எனவே திருக்கோலத்தைப் பற்றிப் பாடும் அதனுடன் தொடர்பான அருட் செயற்றிறனையும் நாம் முதலில் நன்கறிய வேண்டும்.

பெரு நீரறச் சிறு மீன் துவண்டாங்கு
நினைப்பிரிந்த
வெரு நீர்மை யேனை விடுதி கண்டாய்
வியன் கங்கை பொங்கி
வருநீர் மடுவுள் மலைச் சிறு தோணி
வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஆட்டம்
இரவு 8 மணி

RAJASTHAN ROYALS
VS
MUMBAI INDIANS

ஆஷஷ் தொடரை

# வெல்வதுதான் எங்கள் இலக்கு



இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ தொடரை வெற்றிகொள்வதுதான் எமது இலக்கு என அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

**ஆஷஸ் தொடர்**

1882ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் இடையே 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் நடைபெற்று வருகிறது.

இதுவரை நடந்த 66 ஆஷஸ் போட்டி தொடரில் அவுஸ்திரேலியா 30 முறையும், இங்கிலாந்து 31 முறையும் தொடரை வென்றுள்ளன. 5 தொடர் சமநிலையில் முடிந்தது. கடந்த 2009 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடந்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

**முதல் டெஸ்ட்**

இந்த நிலையில் இந்த ஆண்டுக்கான 5 ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ டெஸ்ட் போட்டி தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி நாட்டிங்காமில் ஜூலை 10ஆம் திகதி ஆரம்பமாகிறது. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியை தொடர்ந்து ஆஷஸ் தொடர் நடைபெறுகிறது.

இந்த போட்டிக்காக அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்து புறப்பட்டது.

**வெற்றி எமது இலக்கு**


முன்னதாக அவுஸ்திரேலிய அணி தலைவர் மைக்கல் கிளார்க் அளித்த பேட்டியில் கூறியதாவது:

இங்கிலாந்து அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் உள்ளனர். பல வீரர்கள் ஆஷஸ் தொடரில் விளையாடியவர்கள். தற்போது இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இந்திய தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி கண்டது. சமீபத்தில் நடந்த எங்களது இந்திய சுற்றுப்பயணம் நாங்கள் நினைத்தபடி சிறப்பாக அமையவில்லை. எனவே எங்கள் அணியை குறைத்து மதிப்பிடுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் வெற்றிக்கு தேவையான முழு பலத்தையும் நாங்கள் வெளிப்படுத்துவோம்.

ஆஷஸ் தொடரை வெல்வது தான எங்கள் இலக்கு. இது கடினமான விடயம் என்பது எங்களுக்கு தெரியும். இருப்பினும் ஆஷஸ் தொடரை வெல்ல நாங்கள் தீவிர முயற்சி மேற்கொள்வோம். அவுஸ்திரேலிய மக்களுக்காக ஆஷஸ் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் தேவைக்கு ஏற்ப சிறப்பாக விளையாடவில்லை என்பது அவர்களுக்கு தெரியும். துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பை உணர்ந்து விளையாட வேண்டும்.

துடுப்பாட்டத்தில் நாங்கள் சிறப்பாக செயற்பட்டால், எங்களது இளம் பந்துவீச்சாளர்கள் வாய்ப்பை பயன்படுத்தி 20 விக்கெட்டுகளையும் வீழ்த்துவார்கள் என்று கூறினார் மைக்கல் கிளார்க்.

## நடுவரை அவமதித்ததற்கு அபராதம்



நடுவரை நோக்கி துடுப்பை நீட்டி அதிருப்தியை வெளிப்படுத்திய மும்பை இந்தியன்ஸ் அணியின் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக்கிற்கு போட்டி ஊதியத்தில் 5 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பிளே ஓஃப் சுற்றில் முதல் தகுதிச்சுற்று டில்லியில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ்-மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. மும்பையின் துடுப்பாட்டத்தில் ரவீந்திர ஜடேஜா வீசிய 11ஆவது ஓவரில் மும்பையின் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது ஆட்டமிழப்புக் கொடுத்த நடுவரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நடுவரை நோக்கி துடுப்பை நீட்டினார் தினேஷ் கார்த்திக். இதையடுத்து விதிமுறைகளை மீறியதாகக் கூறி கார்த்திக்கிற்கு அபராதம் விதிக்கப்பட்டது.

## சூதாட்டம் தொடர்பாக சென்னை அணியிடம் விசாரணை

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான குருநாத் மெய்யப்பனிடம் சூதாட்டம் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மும்பை பொலிஸார் குருநாத் மெய்யப்பனிடம் விரைவில் விசாரணை செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவரும், சென்னை சுப்பர் கிங்ஸ



அணியை உரிமைப்படுத்தியுள்ள இந்தியன் சீமெந்து நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான என்.சீனிவாசனின் மருமகனான குருநாத் மெய்யப்பன், பிரபல திரைப் படத் தயாரிப்பு நிறுவனமான ஏ.வி. எம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

## 2 ஆவது டெஸ்டில் டானியல் விக்டோரி

இங்கிலாந்துக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான கிரிக்கெட் தொடரில் அவ்வணியின் சுழற்பந்து வீச்சாளர் புரூஸ் மார்ட்டின் பங்கு கொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதையையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டியில் பங்கு கொண்ட புரூஸ் மார்ட்டின், அப்போட்டியில் உபாதைக்குள்ளாகியிருந்தார். அவரது கால் பகுதியிலேயே உபாதை ஏற்பட்டிருந்தது.

புரூஸ் மார்ட்டினுக்கு மாற்றாக அவ்வணியின் சிரேஷ்ட வீரர் டானியல் விக்டோரி அவ்வணியோடு இணைந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டானியல் விக்டோரி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்காகவே இணையவிருந்த போதிலும், தற்போது புரூஸ் மார்ட்டினின் காயத்தையடுத்து இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாகவே அணியில் இணையவுள்ளார்.

## 17 இலட்சம் வென்றேன்—விந்து


ஐ.பி.எல். சூதாட்டத்தின் மூலம் 17 இலட்சம் வென்றதாக இந்தி நடிகர் விந்து தாரா சிங் பொலிஸ வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

சூதாட்ட தரகர்களுடன் விந்து தாரா நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அவரது வீட்டில் மும்பை பொலிசார் நடத்திய சோதனையில் மடிக் கணனி, சூதாட்டதரகரின் கைபேசி என்பன மீட்கப்பட்டன. அத்துடன் பிரபல பாலிவுட் நடிகர் ஒருவருடனும் விந்துவுக்கு தொடர்பிருப்பதாகவும் இது குறித்தும் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி. எல். போட்டிகளில் விந்து சூதாட்ட தரகர்களிடம் பெருமளவு பணம் பந்தயமாக கட்டி உள்ளார். இந்த பந்தயம் மூலம் அவர் ரூ.17 இலட்சம் ஜெயிதததாக அவரே பொலிசில் ஒப்புதல் வாக்குமூலமாக தெரிவித் துள்ளார்.

"ஜேக்" என்ற பெயரில் அவர் பந்தயம் கட்டி இந்த பணத்தை வென்றுள்ளார். அந்த பணம் எங்கே என்று பொலிஸார் கேட்டதற்கு அவர் சூதாட்ட தரகரிடம் இருந்து அந்த பணம் தனக்கு இன்னும் வந்து சேரவில்லை என்று கூறி இருக்கிறார்.

## தங்கப் பாதணி விருதை வென்றார் வான் பேர்சி



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் இவ்வருடத்திற்கான தங்கப்பாதணி விருதை மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் றொபின் வான பேர்சி வெற்றிகொண்டுள்ளார். இவ் விருதை அவர் பெற்றுக்கொள்ளும் இரண்டாவது தடவை இதுவாகும்.

கடந்த வருடத்தில் ஆர்சனல் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிய றொபின் வான் பேர்சி, 38 போட்டிகளில் 30 கோல்களைப் பெற்று இந்த வருதை வென்றிருந்தார். இம்முறை மன்செஸ்டர் யுனைட்டட் சார்பாக 38 போட்டிகளில் அவர் 26 கோல்களைப் பெற்றிருந்தார்.

அவர் இம்முறை லிவர்பூல் அணியின் லூயிஸ் சுவராஷ் இன் 23 கோலகள், டொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணியின் கரத் பேலின் 21 கோல்களை முந்திக்கொண்டு அதிக கோல்களைப் பெற்றிருந்தார்.

இம்முறை இங்கிலாந்து பிறீமியர் லீக் சம்பியன் பட்டத்தையும் றொபின் வான் பேர்சியில் மன்செஸ்டர் யுனைட்டட் அணியே வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றி பொங்கட்டும்



நேற்று முன்தினம் இடம்பெற்ற பிளே ஓவ் சுற்றில் சன்ரைசர்ஸ் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இப்போட்டியில் 6 விக்கெட்டுக்களால் சன்ரைசர்சை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது ராஜஸ்தான் ரோயல்ஸ். வெற்றிக் களிப்பில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித் தலைவர் டிராவிட், அவரது மனைவி விஜித்தா.

# சூதாட்டத்தில் மேலும் சில அணிகளுக்கு தொடர்பு

## டில்லி பொலிஸ் ஆணையர்

ஐ.பி.எல். சூதாட்டத்தில் மேலும் சில அணிகளுக்கு தொடர்பு இருப்பதாக டில்லி பொலிஸ் ஆணையர் நீரஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஆங்கில தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்,

கிரிக்கெட் சூதாட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தவிர வேறு சில அணிகளுக்கும் தொடர்பு உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தீவிரமாக விசாரித்து வருகிறோம். இதில் தொடர்புடைய அணிகளின் பெயர் விபரங்களை வெளியிட்டால் அது விசாரணையை பாதிக்கும்.


தற்போது விசாரணையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதில் எங்களுக்கு வெற்றி கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம். இப்போது 3 வீரர்கள் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளது. வீடியோ காட்சிகளும் சிக்கி இருக்கிறது.

சூதாட்ட தரகர்கள் முதலில் அஜித சண்டிலாவைத்தான் தொடர்பு கொண்டனர். அவர் மூலம் மற்ற வீரர்களை தொடர்பு கொண்டுள்ளனர். அவர் மூலம் பண பரிமாற்றம் நடந்துள்ளது. இதேபோல் மே 17ஆம்திகதி நடந்த போட்டியிலும் சூதாட்டம் நடத்த திட்டமிட்டிருந்தனர். ஆனால் சூதாட்ட கும்பல் பிடியில் வீரர்கள் யாரும் சிக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## சூதாட்ட விவகாரம்; கொல்கத்தாவில் 9 பேர் கைது!

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டத்தல் ஈடுபட்ட பலர் கைதாகி வருகின்றனர். கொல்கத்தாவில் ஐ.பி.எல் சூதாட்டத்தில் ஈடுபட்ட 9 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களின் வீடுகளில் சோதனை மேற்கொண்டதில் ரூ.3 இலட்சம் பணம், கைபேசிகள் மற்றும் மடிக் கணனிகளை பொலிசார் கைபற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா 2013 நேற்று நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்.மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றபோது பதிவாகிய காட்சிகள்.

# ரஷ்யாவில் நடைபெறும் போட்டியில் யாழ்.மாணவன்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 27 ஆவது விளையாட்டுப் போட்டி எதிர்வரும் யூலை மாதம் 6 ஆம் திகதி ரஷ்யாவில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி போட்டிகளின் உயரம் பாய்தல் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஏலாளசிங்கம் ஜெயரூபன் ரஷ்யாவிற்கு பயணமாகவுள்ளார்.

ஏலாளசிங்கம் ஜெயரூபன், மின் ஒலிம்பிக் என்று அழைக்கப்படும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடைபெற்ற உயரம் பாய்தல் போட்டியில் 180 சென்றி மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப்பதக்கம் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

## ஆட்சியை...

பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய நிலைப்பாடு அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றுவதேயாகும்.

தற்போது அரசாங்கம் செய்வதறியது திணறிக் கொண்டிருக்கின்றது. சர்வதேசத்தையும் எதிர்க்க முடியாத அதேவேளை, வடக்குத் தேர்தலை நடத்த வேண்டிய சிக்கலான ஒரு நிலையை அரசு எதிர்நோக்கியுள்ளது.

13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் ஒரு திரைப்படமாகவே உபயோகிக்கப் பார்க்கின்றது. மக்களின் நலனுக்காக இது கொண்டுவரப்படவில்லை. எனினும் வடக்கு மக்களுக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அவர்களுக்கு சாதாரண ஒரு தீர்வினையாவது பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-11)

## 31 புகலிட...

அமைச்சர் பிரெண்டன் ஓ கோணர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு வரும் அனைவரையும் அங்கிருந்து திருப்பி அனுப்புவதற்கோ அல்லது நவுரு மற்றும் மெனூஸ் தீவுகளிற்கு அனுப்பிவைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆட்கடத்தலில் ஈடுபடுவோரின் வலையமைப்பை முடக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை விவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கார்ப் பந்தய...

வாக்குக் கொடுத்த ஜனாதிபதி ராஜபக்ஷ இன்று அதனை நிறைவேற்றவில்லை. இன்று அரசாங்கம் டீசல், பால்மா மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தி மக்கள் மீது சுமையை ஏற்றியுள்ளது.

கார் பந்தயங்களை வைப்பது மக்களை சந்தோசப்படுத்துவதற்காக அல்ல, தனது மகன்மாரை சந்தோசப்படுத்தவே. இந்த மின் கட்டண உயர்வு அப்பாவி மக்களின் வாழ்க்கையில் எல்லா செயற்பாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, அனைத்து ஊடகங்களும் மக்களுக்கு ஒத்துழைப்பாக செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணி பொரளையிலிருந்து ஆரம்பமாகி மருதானையூடாக கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் வரை இடம்பெற்றது.

இதில் ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்களான ரில்வின் சில்வா, விஜித ஹேரத், கே.டி.லால்காந்த, சுனில் ஹந்துன்நெத்தி, இராமலிங்கம சந்திரசேகரன் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

"ராஜபக்ஷ எந்தநாளும் விளையாடாதே", "மக்கள் மீது சுமையை ஏற்றுவதை நிறுத்து", "உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை இரத்துச் செய்", "அமைச்சர்களின் மின் கட்டணம் அப்பாவி மக்களின் தலையில்" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(ச-11)

## 4ம் மாடி விசாரணை...

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளுக்கும் தனக்கும் கடந்த வருடம் கைத்தொலைபேசி மூலமான தொடர்புகள் இருந்தது எனக் கூறியே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தன்னைத் துருவித் துருவி விசாரணை செய்தனர் என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு விசனம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றைய அமர்வின் மதிய போசன இடைவேளையின்போது அமைச்சர்கள் முன்னிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தன் மேலும் கூறுகையில்,

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் சுரேஷ் ஆகி யோரை நான்காம் மாடியில் வைத்து விசாரித்துள்ளீர்கள்.

நேற்று சிவசக்தி ஆனந்தனை அழைத்து விசாரித்துள்ளீர்கள். நாளைக்கு என்னையும் நான்காம் மாடியில் வைத்து விசாரணை செய்வீர்களா?

ஏன்நீங்கள் இப்படி தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றீர்கள்? தமிழர்களும், அவர்களின் பிரதிநிதி களான கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனிதர்கள் தானே.

ஏன் எம்மைப் புலிகள் என்று நினைக்கின்றீர்களா? அல்லது நானகாம் மாடி விசாரணை மூலம் தமிழர்களை அல்லது கூட்டமைப்பின் உறுப்பினர்களை அச்சமடையச் செய்யலாம் என்று நினைக்கின்றீர்களா?

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ்க் கைதிகளைப் பார்வையிட உரிமை இல்லையா? ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க உரிமை இல்லையா?

இவ்வாறு காட்டமாக கேள்விகளைத் தொடுத்தார் சம்பந்தன்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இதனைக் கடும் தொனியில் தெரிவிக்கும்போது அமைச்சர்கள் வாய் திறக்காமல் அமைதியாக இருந்தனர்.

பின்னர் பாதுகாப்பு 'செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே நான்காம் மாடி விசாரணைக்குப் பொறுப்பு எனவும், அவரே இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும் எனவும் அமைச்சர்கள் கூறினர்.


உடனே குறுக்கிட்ட சம்பந்தன், கோத்தபாயவும் உங்கள் அரசின் கீழ்தானே இயங்குகின்றார் என்று பதிலளித்தார். (எ-11)

## மத்தலவில்...

வருகின்றார்கள்.

உண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு நான் ஆலோசகராக இருந்திருந்தால் நிச்சயம் மத்தளவில் விமான நிலையத்தை கட்ட அனுமதித்திருக்க மாட்டேன்.

மாறாக பராக்கிரம சமுத்திரம் போன்று பாரிய குளம் ஒன்றைக் கட்டுமாறு வலியுறுத்தியிருப்பேன் எனக் கூறினார்.(செ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களது உரிமைகள்...

செல்ல வேண்டும் என குறிப்பிட்டார்.

வடக்கில் தேர்தலை நடத்தக் கூடாது என சிலர் கூறிவரும் நிலையில் உறுதியளிக்கப்பட்டவாறு செப்டெம்பர மாதம் வட மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் தமிழர்களது உரிமைகள் பாதுகாக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அங்கு உரையாற்றுகையில், தேசத்தில் ஐக்கியமின்றி நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முடியாது.

ஒற்றுமையின்மையால் இலங்கையின் ஒரு தரப்பினர் 30 வருடங்களாகப் பிரிந்து இருந்தனர். ஆனால் தற்போது அவர்களது உரிமைகள் சார்ந்த விடயங்கள் பேணப்படுவது அவசியமானது என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதம செயலாளர் அமைச்சர் டி.யூ.குணசேகர, அரசியல் அமைப்பு தொடர்பிலான பிரச்சினைக்கு அரசாங்கத்தினால் தனித்து தீர்வுகாண முடியாது எனவும் இன ஐக்கியத்தை முன்னிலைப்படுத்தியதாகவே அரசியல் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

இதற்கு தமிழர்களின் பங்களிப்பும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)


## CANADA

**Work Permits**

* Male / Female Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract

Closing Date 31-05-2013

(C-3440)

தொடர்புகளுக்கு

iCS Integrated Corporate Solutions Pvt Ltd.
No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000 , 077- 3013060

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

(C-3409)

**IELTS - British Council**
**B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 25.05.2013 Batch II - 27.05.2013 Batch III - 01.06.2013 Batch IV - 03.06.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

## பணியாளர்கள் தேவை

**1) பொது முகாமையாளர்**
**2) நிர்வாக அலுவலர்**

கிளிநொச்சியில் சமூக நல நோக்குடன் இயங்கி வருகின்ற அரிசி மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற நிறுவனமொன்று மேற்படி 2 பணிநிலைகளுக்குமான பொருத்தமான திறமை, அறிவு,அனுபவம் மற்றும் அர்ப்பணிப்பு மிக்க இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை 05.06.2013 இற்கு முன்பாக வேண்டி நிற்கின்றது. தகுதியுடைய பெண்கள் முன்னுரிமை பெறுவர்.

**விண்ணப்ப முகவரி:**

**அருணன், 6, ஸ்ரீ குணானந்த மாவத்தை, தேக்கவத்தை, வவுனியா.**

email: arunanecs@gmail.com விபரங்களுக்கு: 0771435887

(2693)


## 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 10.04.2013 புதன்கிழமை அன்று காலமாகிய எமது குடும்பத் தலைவர் அமரர்

**குழந்தையன் செல்லத்துரை**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியை 24.05.2013 வெள்ளிக்கிழமை இன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 26.05.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று வீட்டுக்கிரியை அவரது இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

கலை ஒளி வீதி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

(2827)


தற்போது யாழ் நகரில்... edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

**சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்**

## BTEC HND in Computing & Systems Development

- நவீன உலகின் தொழிற்சந்தை வாய்ப்பு மற்றும் மாற்றங்களை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநெறிக் கட்டமைப்பு
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை (Job Oriented) உறுதிப்படுத்தும் முழு நேர தீவிர பயிற்சி நெறியுடன் கூடிய கற்கை நெறி
- நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
- BCAS Campus இன் Colombo தலைமையகத்திலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்




www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## தொழில்துறை அபிவிருத்தியும் வேலைவாய்ப்புக்களும் கருத்தரங்கு

**24.05.2013 வெள்ளிக்கிழமை**
**25.05.2013 சனிக்கிழமை**
**26.05.2013 ஞாயிற்றுக்கிழமை**

மூன்று நாட்களில் முறையே சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தையல் மற்றும் கலைகள் சம்பந்தமாக யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் கருத்தரங்கும் பதிவு செய்தலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

(18 வயது தொடக்கம் 25 வயது வரை மட்டும்)

(C-3404)

தொடர்பு: நிதா கோகுலம்
பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்
நந்தாவில் அம்மன் கோயில் வீதி, கோண்டாவில்.
தொ.பே.: 077 228 8186


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org